படைப்பு
சமூகத்தின் இணைப்பு


ஊற்று-7 | நதி-8 | டிசம்பர் 2024 | திங்களிதழ்
ISSN: 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com

## வாசிப்பு - 2024



படைப்பு தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-7 | நதி-8 | டிசம்பர் 2024

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர்:
**ஜின்னா அஸ்மி**
•
ஆசிரியர்:
**ஆசியாதாரா**
•
நிர்வாகக் குழு:
**சகா (சலீம் கான்)**
**ஜெ. ராஜா ஜெயகரன்**
•
தலைமை நிருபர்:
**க.சோ.திருமாவளவன்**
•
நிருபர்கள் குழு:
**முனைவர் கோ.நித்தியா**
**தீபிகா நடராஜன்**
•
முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**
•
வடிவமைப்பு:
**ஆர்.பிரகாஷ்**
•
ஓவியக் கலைஞர்கள்:
**திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்**
**அழ.ரஜினிகாந்தன்**
•
படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி:
padaippugal@padaippu.com
•
அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர், கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு - 607002.
**admin@padaippu.com**
***73388 97788 / 73388 47788***

நேர்காணல்கள் மற்றும்
கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர்
கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின்
கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு
மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...

- **தலையங்கம்** - ப. 04
- **வாசிப்பு - 2024**

அமிர்தம் சூர்யா - ப. 05
கனகா பாலன் - ப. 07
குடந்தை அனிதா - ப. 09
ஜின் - ப. 11
வைகை சுரேஷ் - ப. 13
தயானி தாயுமானவன் - ப. 15
மு.முருகேஷ் - ப. 17
எம்.எம்.தீன் - ப. 18
செ.புனிதஜோதி - ப. 19
நயினார் - ப. 21
ப்ரியா வெங்கடேசன் - ப. 22
வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் - ப. 23
ஸ்ரீவாரி மஞ்சு - ப. 25
இலக்கியா விஜய் - ப. 26
கி.சரஸ்வதி - ப. 27
சண்முகசுந்தரம் - ப. 28
லாஸ்யா - ப. 29
ஜே.ஜே.அனிட்டா - ப. 30
ஜெய்ப்பிரகாஷ் - ப. 31
கரிகாலன் - ப. 32
செல்வி கணேசன் - ப. 63

- 'ரசனையும் எதிர்பார்ப்பும் மாறிக்கொண்டிருப்பவை..'
  - கவிஞர் ந.பெரியசாமியுடனான நேர்காணல் - ப. 35
- டாக்டர் உன்குழாய்
  - ஆண்டன் பெனி - ப. 50
- கடலாகும் ஒரு துளி
  - கவிஜி - ப. 53

## சிறுகதைகள்

- கடைசி மனிதன்
  - ப.தனஞ்செயன் - ப. 45
- ஹெச் டூ ஓ
  - ஜபினத் - ப. 59

## கவிதைகள்

- கார்த்திக் திலகன் - ப. 58






## Facilities

- *Capacity 90 - 100 (Persons)*
- *AC Hall with Audio system*
- *POP with Profile lights*
- *Tea / Coffee snacks place*
- *Projector*

படைப்பு அரங்கம்
# 3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,
கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024

+91 73388 97788, 73388 47788

# தலையங்கம்

வணக்கம். படைப்பு ‘தகவு’ எண்பதாவது இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

2024ஆம் ஆண்டில் தங்களை ஈர்த்த புத்தகங்கள் குறித்துப் படைப்பாளர்களும் வாசிப்பாளர்களும் பகிர்ந்துகொள்ளும் பகுதி இவ்இதழில் இடம்பெற்றுள்ளது.

2024இல் எஸ்.ராமகிருஷ்ணனின் கிதார் இசைக்கும் துறவி சிறுகதைத் தொகுப்பு கவனம் ஈர்த்த தொகுப்பாக வெளிவந்துள்ளது. எஸ்ராவிற்கே உரிய கருக்களோடு தனித்த மொழிவளத்துடனான நூலாக உள்ளது. பக்தவத்சல பாரதியின் மானுடவியல் பேசுவோம் நூல் ஒரு பின்காலனித்துவக் கதையாடலாக பண்பாட்டின் வழியான உரையாக வெளிவந்துள்ளது. சு.தமிழ்ச்செல்வியின் சிறுகதைகள், ந.கோவிந்தராஜனின் வெள்ளை நாக்குகளும் தமிழ்க் காதுகளும் எனப் பலவாறான படைப்புகள் தமிழில் வெளிவந்து கவனத்தை ஈர்த்துள்ளன.

படைப்பு பதிப்பகம் எம்.எம்.தீனின் நீர்ப்பரணி, விக்ரமாதித்யனின் தற்காலச் சிறந்த கவிதைகள், பிரபுசங்கரின் 90ஸ் கிட்ஸ், ஜெ.பிரான்சிஸ் கிருபாவின் ஓலங்கள் சுழலும் உடைந்த இசைத்தட்டு, மணிஅமரனின் தனியொரு அன்றில் போன்ற கவனம் பெறத்தக்க வாசிப்புக்கு உரிய நூல்களை 2024இல் வெளியிட்டுள்ளது.

சாகித்ய அகாதமியின் 2024ஆம் ஆண்டிற்கான விருது ஆ.இரா.வேங்கடாசலபதியின் “திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும் 1908” என்ற ஆய்வு நூலுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1908இல் திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் நடைபெற்ற மக்கள் எழுச்சி குறித்த ஆழமான பதிவாக இந்நூல் வெளிவந்துள்ளது.

ஆன்மீகத்திற்கும் வேட்கைக்கும் இடையே ஒரு மனிதன் படும் பாட்டையும் அவனது முடிவுகளால் ஒரு பெண் படும் பாட்டையும் கூறும் சம்சாரா என்ற திரைப்படம் குறித்து ‘உலக சினிமா’ பகுதி பேசியிருக்கிறது.

டாக்டர் உன்குழாய் பகுதியில் யூடியுபில் உருவாகும் திடீர் டாக்டர்கள், அறிவியல்பூர்வமற்ற தகவல்கள், யோசனையின்றிப் பின்தொடர்வோர் பற்றி மிகவும் எள்ளலான தொனியில் ஆண்டன் பெனி பேசியுள்ளார்.

தமிழின் குறிப்பிடத்தக்க கவிஞரான ந.பெரியசாமியுடனான நேர்காணல் இவ்இதழில் வெளியாகியுள்ளது. தனது வாசிப்புகள், கவிதை உருவாக்கம் குறித்துப் பகிர்ந்துகொண்டுள்ளார்.

கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் என நிறைந்திருக்கும் இந்த மாதத் தகவின் அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

– ஆசிரியர்.

வாசிப்பு 2024

அமிர்தம் சூர்யா



# இந்த ஐந்து நூல்களுக்கு நான் கேரண்டி

இந்த நூல்கள் குறித்து சாதி, மதம், அரசியல், குழு என்ற எந்தச் சார்பும் இல்லாமல் நேர்மையாகச் சொல்லியிருக்கிறேன். திருப்தியில்லை எனில் சரியான காரணத்தைச் சொல்லித் தர்க்கம் செய்தால் பணம் வாபஸ் என்றும் சொல்ல முடியும்.


2024இல் நான் நிறைய வாசித்திருந்தாலும் கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, நாடகம் என இந்த ஐந்து பிரிவுகளில் ஐந்து நூல்களைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். அதை வாசகர்களுக்குப் பரிந்துரையும் செய்ய முடியும். அந்த நூல்கள் உங்களை ஏமாற்றாது. உங்கள் பணத்தை விரயமாக்காது என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.


கவிதையில்.. பூவிதழ் உமேஷ் எழுதிய தண்ணீரின் சிரிப்பு என்ற கவிதைத் தொகுப்பு - இது ஸ்பானிஷ் நாட்டுக் கவிதை வகைமை. அபோரிஸம் என்று பெயர். ப்ரான்ஸ் காப்கா போன்ற இலக்கிய மேதைகள் கையாண்ட வடிவம். தமிழுக்கு இது புதுசு.


சிறுகதையில்... சீராளன் ஜெயந்தன் எழுதித் தொகுத்த அதிகார விநாயகர். முக்கியமான தொகுப்பு எனலாம். நிகழ்கால அரசியல், சமூக கோபம், நாம் எழுதத் தயங்கும் சில நுட்பமான அவதானிப்பு எனப் பல நல்ல அம்சங்களைக் கொண்டது இந்தப் பன்னிரண்டு சிறுகதைகளின் தொகுப்பு.

நாவல் வகைமையில் சித்ரா சிவன் எழுதிய அத்தினி. தாய்வழிச் சமூகத்தின்










பண்பு, பழி வாங்கல், தலைமைப்பண்பு, இனத்தைக் காத்தல் இப்படி எல்லாக் குணமும் கொண்டது பெண் யானை. பெண் யானைக்கு அத்தினி என்று பெயர். சமூகத்தில் தாம் சந்தித்த அத்தினியாக இருக்கும் பெண்களைப் பேசும் நாவல் இது. கவனிக்கத்தக்க நூல்.

நாடகத்தில்.. விரல் விட்டு எண்ணக்கூடிய நூல்களே வருகிறது. அதில் முக்கியமானது வே.எழிலரசு எழுதிய மூன்று நாடகப் பிரதிகளின் தொகுப்பான... முத்தமிழும் மூன்று கொலைகளும் என்ற நாடக நூல். தமிழுக்காக.. தமிழுக்கு ஊறு விளைவித்த மன்னர்களைக் கொல்வதுதான் மையம்.

கட்டுரையில்.. டாக்டர் பாஸ்கரன் எழுதிய சித்தாவரம் என்ற நூல். இது சித்த வைத்தியம் பற்றிய நூல் மட்டுமல்ல. நமது வாழ்வில் கையோடு இருக்கவேண்டிய நூல். தினந்தோறும் பயன்படும் நூல். சித்தா வரம் என்றும் கொள்ளலாம், சித் - தாவரம் என்றும் கொள்ளலாம். பரிசளிக்க ஏற்ற நூல்.

■



கனகா பாலன்



# களை கட்டும் கூத்து

கவிதையோ, சிறுகதையோ எதுவாக இருந்தாலும் எழுத்தாளர் கண்மணிராசா அவர்களின் படைப்புகளுக்குத் தோதாக அமர்த்திக்கொள்ள என்னிடம் நிலக்காட்சி தானாகவே எழும்.

'பெத்தம்மா' கதையினை ஆனந்தவிகடனில் வாசித்துவிட்டு அவரிடம் கருத்துக்களைப் பரிமாறியபோதே இதைச் சொல்லியிருக்கிறேன்.

கூறு கெட்ட காதலுக்குச் சாதி தெரியுமா? மதம் தெரியுமா? கழுத, ஆனது ஆகிப்போச்சுன்னு பெத்தம்மாவுக்கும் அந்த வேற்று சாதிப் பையனுக்கும் கல்யாணம் பண்ணி வைத்திருக்கலாம். அது இல்லாமல் இந்த வன்ம மனமுடைய மனிதர்கள், தான் பெற்ற மகளையே தீயிட்டுக் கொளுத்திவிட்டு, பிராயச்சித்தமாகக் காலமெல்லாம் சூடம் ஏத்தி ஆராதனை செய்கிறார்கள். அப்பப்பா அதிலும்தான் எத்தனை நேர்த்தி. அந்தச் சொல்முறைதான், யாரென்று தெரியாத அந்தப் பெத்தம்மாவை வாசிக்கும் நம்மையும் கையெடுத்து வணங்கச் செய்துவிடுகிறது.

தன் வலிகளை, எழுத்தின் வழி அன்றாடமும் டைரியின் பக்கங்களில் இறக்கி வைத்திருக்கும் 'லாட சன்னாசியின் டைரி' கதையின் கருப்பசாமி ஆகட்டும், 'அசல்' என்ற கதையின் 'எது எடுத்தாலும் பத்தே ரூபா எது எடுத்தாலும் பத்து ரூபா' என்று நம் வீதிகளில் குரல் அதிர நடந்துபோகும் இருளப்பனாகட்டும், இன்னும் கொஞ்சம் வாழ்வைக் கூரச் செய்கிறார்கள். அந்த எளியவர்களின் துயரங்கள் பெரும்பான்மையினர் அறியாதவொன்றாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது.

இந்நூல் தலைப்பான 'கூத்து' என்ற சிறுகதையில், சன்னதம் வந்தவன் முதலில் மெதுவாக ஆடத்தொடங்கிக் கொஞ்சம் கொஞ்சமாக உச்சத்தில் உக்கிரமாவது போல், இயல்பாக மெதுவாக நகர்ந்த கதை கடைசிப் பத்தியில் கண்ணீர்விட வைத்துவிட்ட வரிகள்தான் இவை.

'ஆங்காரமாக கல்லில் இருந்த ரெங்கையாவை ஓங்கி ஓங்கி மிதித்தான். உதையை வாங்கிக் கீழே சரிந்து விழுந்து சலனமற்றுக் கிடந்த சிவாவை நாதன் மாமாவை கூட்டிக்கொண்டு, உரத்த குரலில் அழத் தொடங்கினான்..'




மனதின் அழுத்தம் தாளமாட்டாமல் வெடித்துச் சிதறும் சொற்கள், ஒரு கல்லையும் மனிதனெனப் பாவித்துத் தன் குமுறலைக் கொட்டிய சிவகாமி நாதன் மாமாவின் தோளினைத் தட்டிக்கொடுத்துத் தேற்ற நீட்டிய என் கரங்களை, சில நொடிகளுக்குப் பின் மீண்டு உள்ளிழுத்துக்கொண்டேன்.

நாம் சந்திக்கும் எல்லோருக்கும் உண்டு கதை, ஆனால் சிலவைதான் தேர்ந்தெடுத்த கதாசிரியர்களால் கதையாக்கப்பட்டு அக்காலத்தைப் புகைப்படமாக மாறாதவண்ணம் மனதில் நிலைநிறுத்துகின்றன.

இத்தொகுப்பில் மொத்தம் பத்து கதைகள்.

வலிய கிழவன், லட்டு சுப்பம்மா, தங்கா என்ற வித்தியாசமான தலைப்புகளோடு சிறப்பாக வந்திருக்கிறது.

எழுத்தாளர் கண்மணிராசா அவர்களுக்கென் வாழ்த்துக்களும் பாராட்டுகளும்.

நிச்சயம் களை கட்டும் ‘கூத்து.’ ■

## குடந்தை அனிதா



# வசமாகும் ஹைக்கூ மொழி

நூல் : சேரிக்குள் தேர்

நூலாசிரியர்: செ. ஆடலரசன்

கும்பகோணத்தில் வசிக்கும் செ.ஆடலரசன் அவர்கள் அபாரமான வாசிப்பு அனுபவம் கொண்டவர் என்பதறிவேன். 2024 டிசம்பரில் வெளியான அவரின் "சேரிக்குள் தேர்" நூலை வாசிக்க வாசிக்க ஹைக்கூ மொழி, படிப்பவர் வசமாவதை உணர்ந்துகொள்ள முடிந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் க.கனிமொழி அவர்களுக்குப் பிடித்த நாடாளுமன்ற அவையில் வாசித்த ஹைக்கூ இதுவென்றும் ஞாபகம் வந்தது.

"எத்தனைபேர் கூடி இழுத்துமென்ன
இன்னும் வரவில்லை
சேரிக்குள் தேர்".

அதுமட்டுமல்லாமல் என்னைப் பற்றிக்கொண்ட ஹைக்கூ சிலவற்றையும் பகிர்ந்துகொள்கிறேன்.

"பள்ளிக்கூடத்தில்
பத்து மணி முதல் நான்கு மணி வரை
ஆறுகால்கள் நாற்காலி."


இன்றைய கல்வித் திட்டத்தில் விளையாட்டு என்பதை மறந்த படிப்புதான் பள்ளிக் கல்வியாக இருப்பதை இதை விட எளிமையாக எப்படி சொல்வது..

"லகானை இழுக்க
நின்றது
தாளம்".

ஆனால் இதைப் படித்த பின் என் மனமோ டொக் டொக் டொக் எனத் தாளம் போடத் தொடங்கியது.

"ஏழை நெசவாளி
கைத்தறியில்
நெய்யும் சிலந்தி".

இங்கு ஒன்று சொல்லத் தோன்றுகிறது, தறியில் என்று மட்டும் கூட இருக்கலாம் என்று நினைக்கிறேன். வறுமையை வேலையின்மையை வலியை மற்றொரு உயிருடன் தொடர்புபடுத்தி அதன் வாழ்வை மதிக்கத் தெரிந்த மனிதன் நூலாசிரியர் ஆடல்.




"அதே வயல்
அதே உழவன்
அடுக்ககக் காவலாளி".

நீண்ட நேரம் இந்த வரிகளிலிருந்து மீள முடியவில்லை. வாழ்ந்துகெட்ட குடும்பம் கேள்விப்பட்டிருப்போம். ஏன், எதனால், எப்படி என்ற கேள்விக்கு யாரிடமும் பதிலிருக்காது. மனதைப் பிசையும் வரிகள் இவை.

அதே போல மற்றொன்று படிக்கக் கண்களில் கண்ணீர் நிறைந்தது.

"ஒழுகும் கூரை
புதிதாய் வாங்க வேண்டும்
இன்னும் கொஞ்சம் பாத்திரங்கள்".

இன்னும் இன்னும் நிறைய வாழ்வியல், கூடவே அதிகமாக நிலா, அணில், அக்காக்குருவி.. இப்படியாக எளிமையாக வாசிக்க வாசிக்க நம் சிந்தனையைத் தூண்டும் பல மொழிகளை நூலாசிரியர் நம்மிடம் கடத்துகிறார்.

இன்னும் பல பல எடுத்துச்சொல்ல ஆவல் இருந்தாலும் நூலை வாசிப்பவர்கள் அனுபவிக்க உங்கள் பார்வைக்கு விட்டுவைக்கிறேன்.

■



# விரிந்திடும் பார்வை

நூல் : பெருங்காமப் பெண்களுக்கு இங்கே இடமிருக்கிறதா உடைத்துப் பேசுவோம்

ஆசிரியர் : கனலி

மூன்று நேரமும் ஒரே வேலையைத் திரும்பத் திரும்பச் செய்வது எவ்வளவு துன்பகரமானது? என்பதையும், அதைவிட பாத்திரங்கள் கழுவுவது மிகச் சவாலான காரியமென்பதையும் நான் ஓரளவு சமைக்கக் கற்றுக்கொண்டபோதுதான் புரிந்துகொண்டேன். அதுவும் சம்பளம் இல்லாமல்? பெண்கள் செய்யும் இந்தச் செயலை நினைத்தால் உண்மையில் அப்போது எனக்குப் பிரமிப்பாக இருந்தது. அதே சமயத்தில் இவர்களின் நிலை இப்படி இருக்கிறதே என்ற கவலையும் தொற்றிக்கொண்டது.

இந்தப் புரிதலோடுதான் இந்தப் புத்தகத்தை இன்று வாசிக்க ஆரம்பித்தேன். நல்ல உழைப்பு. நல்ல முயற்சி. மற்றும் பெண் விடுதலை வேட்கை உள்ள நல்ல ஆன்மாவின் செயல் இதுவென்றும் நான் உணர்ந்துகொண்டேன்.

இந்தப் புத்தகத்தின் வாயிலாகப் பெண்களைக் குறித்தும், அவர்கள் படும் துயரங்கள் குறித்தும் இன்னும் கொஞ்சம் தெளிவாக என் பார்வை விரிந்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

திரைப்படங்கள் செய்யும் அயோக்கியத்தனத்தையும், மீடியாக்கள் செய்யும் அயோக்கியத்தனத்தையும், ஆண்கள் செய்யும் அயோக்கியத்தனத்தையும் மற்றும் பெண்களுக்குப் பெண்களே செய்யும் அயோக்கியத்தனமுமென இந்த அத்தனையையுமே நமக்குள் தெள்ளத்தெளிவாகக் கடத்தி இருக்கிறார் எழுத்தாளர்.




உண்மையில் பெண்ணாக இருப்பது எவ்வளவு கொடுமையானது என்பது இந்த நூலை வாசிக்கும்பொழுது கூடுதலாக நமக்குப் புலப்படலாம். ஓர் அடிமைக்கு அவர் அடிமை என்பதை முதலில் உணர்த்து. பிறகு தானாகவே அவர் கிளர்ந்து எழுவார் என்ற அண்ணல் அம்பேத்கர் அவர்களின் வரிகளை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏனெனில் தோழர் சுப்பு கனலி அவர்களும் இந்தப் புத்தகத்தின் வாயிலாக, நம்மிடம் சொல்ல வருவதும் அதைத்தான். அவரின் அந்தப் பொறுப்பை, அந்தக் கவலையை அல்லது அந்த ஆதங்கத்தை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.

எப்படியேனும் பெண்களைச் சரியான புரிதல் உள்ள வாழ்க்கைக்குள் கொண்டுவரவேண்டுமென அவர் கடினமாக உழைத்திருக்கிறார் என்பது அவருடைய எழுத்துக்களில் தெரிகிறது. மேலே வாருங்கள். உடைத்துப் பேசுங்கள். உரக்கப் பேசுங்கள், நாம் தாய்வழிச் சமூகம், ஆண்கள் நம்மை ஏமாற்றுகிறார்கள், நாம் யாருக்கும் அடிமை இல்லை நமக்கும் யாரும் அடிமை இல்லை போன்றவற்றை எல்லாம் அவர் போதிப்பது நல்வரவு.

மேலும் பெண்களாகிய நாம் அடிமைகள் அல்ல. ஆணாதிக்கச் சமூகத்தால் அடிமையாக்கப்பட்டிருக்கிறோம் என்ற உண்மையையும் வெளிப்படையாக உடைத்துப் பேசி இருக்கிறார் என்பது சிறப்புச்செய்தி.

கட்டாயம் அனைவரும் வாசிக்க வேண்டிய நூல் இது. குறிப்பாக, பெண்கள் வாசிக்க வேண்டிய மிக முக்கியமான நூல் இது என்பேன். பொய்யான கற்பிதங்களை அடித்து உடைத்துப் பெண்களின் பல கேள்விகளுக்கு விடை சொல்கிறது. தேடுதல் உள்ள பெண்களுக்கு இந்த நூல் ஓர் வரம். அவ்வளவுதான் டாட். அனைவரின் மீதும் அன்பு செலுத்துவோம். ஆண் பெண் சமத்துவம் போற்றுவோம். ■

வைகை சுரேஷ்

# வியர்வை, கண்ணீர், இரத்தம்



**நூல்: நக்சல்பாரி ஒரு கிராமத்தின் பெயர் மட்டுமல்ல (ஒரு சுருக்கமான வரலாறு)**

**ஆசிரியர்: இரா.முருகவேள்**

சென்னையில் எனது கல்லூரிக் காலம். சக மாணவ நண்பர்களுடன் ஷங்கர் இயக்கத்தில் சுஜாதாவின் கதை வசனத்தில் வெளிவந்த "பாய்ஸ்" படம் பார்த்தேன். படத்தில் சித்தார்த் மற்றும் குழுவினரைக் கைது செய்யும் போலீசார் மூர்க்கமாகத் தாக்கியபடி, 'நீங்கள் நக்சலைட்டா?!' என்று கேட்பதாக ஒரு காட்சி வரும். இப்படியாக நக்சல்பாரிகள் என்றாலே தீவிரவாத சிந்தனை என விதைக்கப்பட்டவை ஏராளம். ஆனால் இரா.முருகவேள் அவர்களின் 'நக்சல்பாரி ஒரு கிராமத்தின் பெயர் மட்டுமல்ல' (ஒரு சுருக்கமான அறிமுகம்) நூலை வாசித்தால், கனவு காணவும் பிறரைக் காணத் தூண்டவும் இயலாதவன் உண்மையான புரட்சிக்காரனாக இருக்க முடியாது என்ற தோழர் சாரு மஜும்தாரின் கூற்றை உணர்வுப்பூர்வமாக உணரும் ஒரு தோழராகிவிடுவீர்கள்.

தோழர் சாரு மஜூம்தார் அனைத்து மாணவர்களையும் பள்ளி கல்லூரிகளில் இருந்து வெளியேறிக் கிராமங்களுக்குச் சென்று ஏழை விவசாயிகளுடன் ஐக்கியப்படும்படியும் செங்காவலர் குழுக்களைக் கட்டும்படியும் அறைகூவல் விடுத்தார். இதை ஏற்றுக்கொண்டு எண்ணற்ற மாணவர்களும் இளைஞர்களும் கிராமங்களுக்குச் சென்றனர்.

1922இல் இந்திய தேசியக் காங்கிரஸின் மாநாடு கயாவில் கூடியது. பொதுவுடைமை எண்ணம் கொண்டவர்கள் தங்களை வெளிக்காட்டிக் கொள்ளத் தயங்கிய அந்தக் கூட்டத்தில் 63 வயதான சிங்காரவேலர்

தன்னைக் கம்யூனிஸ்ட் என்று கம்பீரமாக அறிவித்துக்கொண்டார். மாநாடு அதிர்ந்து போனது.

இது போன்ற வரலாற்றுத் தகவல்களைக் கொண்ட ஒரு ஆவணமாக உள்ள இந்த நக்சல்பாரிகள் உழைப்பாளர் பக்கம் என்பதைப் புரிந்துகொள்ள பீஹாரின் போஜ்பூர் மாவட்ட நில பிரபுக்களின் ஆதிக்கம், பத்து வயது முதல் தலித் மக்கள் நிலங்களில் கொத்தடிமைகளாக வேலை செய்ய வேண்டும் என்ற நிலை, தலித் பெண்கள் திருமணம் ஆனதும் முதலிரவை நில பிரபுக்களின் வீட்டில் கழிக்க வேண்டும் எனப்படும் மோலி பராடா எனும் வழக்கத்தில் இருந்து வந்த விதி எனும் கண்ணீர், கோடியாரி, இந்திய நேபாள எல்லையில் உள்ள ஒரு நக்சல்பாரி கிராமம், ஷாந்தி முண்டா எனும் பழங்குடியினப் பெண் பழங்குடியின மக்களைப் போலீசார் தாக்கியபோது விவசாயிகள் முன்பு அரண் போல் நின்று அம்புகளை எய்து போலீசாரைக் கொன்ற வீரம் செறிந்த ரத்தம் என வாசிக்கும்போதே களப் போராட்ட வாழ்வியலைக் கண் முன்னே காட்டுவது உணர்வுப்பூர்வமானது. இதோ இன்று பழங்குடியினப் பெண் ஒருவரை இந்திய ஒன்றியத்தின் குடியரசுத் தலைவராக ஆக்கிவிட்டோம் என்று கூறிவிட்டு, அதே நேரத்தில் மணிப்பூர் மாநிலத்தில் பழங்குடியின மக்களின் வாழ்வோடு கோரமாக விளையாடி உலக




நாடுகளின் கண்டனத்தைப் பெறும் இந்தச் சூழலில், இந்த ஒட்டுமொத்த உலகமும் தாராளமயம், உலகமயம், தனியார்மயம் எனப் பயணிக்கும் இந்தச் சூழலில், சாமானிய மக்களின் வாழ்வியலைப் பாதுகாக்கும் வரலாற்றுத் தகவல்களை வியர்வை, கண்ணீர், ரத்தம் என வாசிக்கும் ஒவ்வொருவரின் கைகளிலும் வைக்கும் ஒரு முயற்சியே இந்த "நக்சல்பாரி ஒரு கிராமத்தின் பெயர் மட்டுமல்ல" எனும் ஒரு சுருக்கமான வரலாறு. வியர்வை, கண்ணீர், ரத்தம் மூன்றையும் ஒரு நூலின் மூலம் உணர்ந்திட வாங்கி வாசித்துப் பாருங்கள் நீங்களும்.

தயானி தாயுமானவன்

# அனுபவத்தின் சாரல்



நூல் : பழகிப்போன நிராகரிப்புகள்

ஆசிரியர் : கார்த்திக் கல்யாணி

கீழ்த்தஞ்சையின் வாசம் குறையாமல் மண்ணின் மைந்தர், சகோதரர் கார்த்திக் கல்யாணி அவர்களின் நூல். புனைவற்ற நீரோட்டத்தின் போக்கில் கவிதைகள்... வாழ்வின் அறம்பாடி நிற்கின்றன.

அவரது கவிதைகளில் தினசரி வாழ்வின் எதிர்பார்ப்புகளில் கரையும் நீர்க்குமிழ்களாக உடைந்துவிடும் கனவுகளும் நனவில் கைகூடாது போயினும் வலிகளையும் சுகமாக்கிக் காட்டாற்று வெள்ளத்தில் மிதக்கும் சருகானாலும் எள்ளலுக்கும் குறைவில்லை. தன் தாய்க்கு மானசீகமாகச் சமர்ப்பிக்கும் கவிதை நூல் இது.

கடவுள் கடவுள் எனத் தேடியலையாதே... உள்ளிருக்கும் நம்பிக்கையே கடவுள் எனப் புதிய கதவைத் திறக்கிறார்.

இன்றைய இயந்திர வாழ்வில்... "காலனின் அழைப்பில் ஞாலம் விடைபெற..." என்ற ஒற்றை வரியில் வாழ்வை அழகாகப் புரிய வைப்பதோடு... மனக்காயங்களுக்கு மருந்திடுங்கள் என்ற வரிகளில் கவிஞரின் சிந்தனை சிறப்பு.

அறுபத்து ஐந்து வயது மாணவன் நினைவுகூரும் தருணம். ஆசிரியர்களை மிகவும் கவர்ந்த வரிகள். "கசக்கிப் பிழிந்து கணக்கை வரவழைக்கும் மனோரஞ்சிதம் டீச்சர்" எனச் சிறுவனாகப் பெயர் மறக்காத மாணவனின் வரிகள் பசுமையாக இளமை பேசுகிறது.

பன்னாட்டு மூலதனத்தில் "விளைச்சலும் வெள்ளாமையும்" கவிதை மணக்கிறது.

மண்பாசம்.. "உழவில்லாத நிலம் மிளகில்லாத ரசமென்ற ருசியை அறிந்தவனே விவசாயி" எனக் கோலோச்சும் வரிகள்.

வெகுண்டு எழுந்தவரெல்லாம் துவண்டே போயினர் என்ற காட்சி நமது அன்றாடக் காட்சிகள் விஷம் தழும்பும் கோப்பைகள் கவிதை. "ரோடு போட்டு சுங்கம் வசூலிக்கும் எறும்புகள்" வரிகள் நமது மண்ணின் விலை




போன வாழ்வில் ஊதியம் என்பது பெறுவது அல்ல, தருவதற்கு வாழ்வின் விலையாக, என்ற எள்ளலில் சிறப்பு செய்கிறார் கவி.

நிறைவேறாத காதல் நினைவு எப்போதும்... நலம் விசாரிக்கிறது, காலம் கடந்த சந்திப்பிலும். இன்று எழுதப்படும் காதல் கவிதைகளைப் புறந்தள்ளுகின்றன இவரது இடையில் மலர்ந்த குடைகள்.

மாத சம்பளம் முடியும் தருவாயில் குடும்பத் தலைவனின் மன ஓட்டம் இந்தக் கவிதையில் “இனி என்ன செய்யலாம்?” யாருமற்ற சிலுவை - கவிதை காலத்தை வென்றது. இந்நாட்டில்தான் நாங்களும் வாழ்கிறோம், கொஞ்சம் நாளைய இந்தியாவைத் திரும்பிப் பார்க்க வைக்கும் கவிதையும்... வார்த்தைச் சிற்பம்.

சம்சாரம் எனும் மின்சாரம் எள்ளலின் உச்சமும் மனைவியின் மீது பாசமும் கவிதையில் போட்டியிடுகின்றன. மௌனம் கூட பிறழ்சாட்சியம் என்பதை இத்தனை அழகாக எந்தக் கவிதையும் செவிட்டில் அறையவில்லை.

பஞ்சதந்திரமாய் நயமாய்ப் பேசிப் பாலில் பழம் விழுந்ததோ என்பது போல் ஏமாற்றும் வித்தையைப் பிட்டுப் பிட்டு வைக்கும் கவிதை... மானுட சூட்சமம் வீசும் பாச வரிகள். மனிதர்களை நம்பாத காதல் கடைசியில் மரமாவது நட்டுவை... நமது காதலைக் கதைகளாக பேசும் - என்ற மரம் நடுவிழா கவிதை அவரின் அனுபவ வரிகள். கோடிகளில் குவியும் பணத்திற்கு ஒரு பட்டியல் இடுகிறார்... பாமரனின் பக்கமிந்த கவிதை. தாரமானவள் தாயான பின்பு அவளுக்குத் தனி உலகம்.. பாசத்தைக் காணிக்கை தர மறக்காதே. எல்லா இதயமும் வேண்டுவது அள்ளித் தரும் அன்பைத்தான் - என இல்லறத்தின் நல்லறம் பேசும் கவிதையென நூல் புனைவற்ற பேரழகு. நிலம் கொத்திப் பறவைகள் வேளாண்மை செய்தவனை மேலாண்மை செய்யும் உலக வர்த்தகம் என்ற வரிகள் விவசாயிகளின் கண்ணீர்.


இப்படி நூல் முழுதும் அனுபவத்தின் சாரல் மழையாகக் கவிதைகள் நிரம்பிய நூல் “பழகிப்போன நிராகரிப்புகள் “ எனும் கார்த்திக் கல்யாணியின் நூல்.

■

மு.முருகேஷ்

# சிக்கவைத்த கவிதைகள்





நூல் : குலசாமியின் முத்தம் (கவிதை நூல்)

ஆசிரியர் : ஆலங்குடி வெள்ளைச்சாமி

கடந்த 40 ஆண்டுகளாகத் தமிழ்க் கவிதைகளைத் தொடர்ந்து வாசித்துவருபவன் நான். இன்றைக்குத் தமிழில் எழுதப்படும் சிறுகதைகள் உலகத் தரத்தில் எழுதப்படுகின்றன என்று சொல்வதைப் போலவே, தமிழ்க் கவிதைகளும் எழுதப்படுகின்றன என்பதை வாசிப்பின் வழி உணர்ந்தவன் நான்.

என்றாலும் சொல் புதிது; பொருள் புதிது; சிந்தனை புதிதாக எழுதப்படும் தமிழ்க் கவிதைகளில் தெளிவான அரசியல் பார்வையும் சமூகப் புரிதலும் இல்லை என்பதே எனது அவதானிப்பு. எதிலும் பட்டும்படாமல் மேம்போக்காகவும், மொழியைத் திருகி இறுக்கமாக எழுதுவதுதான் கவிதை என்கிற புரிதலும் சிலரிடத்தில் இருக்கிறது.

சமீபத்தில் நான் வாசித்த ஆலங்குடி வெள்ளைச்சாமியின் 'குலசாமியின் முத்தம்' என்கிற கவிதை நூல், என்னை வெகுவாகக் கவர்ந்து இழுத்தது. தேர்ந்த கவிதை மொழி, தெறிப்பான கவிதை வீச்சு, நேரான சரியான அரசியல் பார்வையோடு உழுகுடிகளின் சொல்லொண்ணா வலியைக் காத்திரமாகப் பதிவுசெய்துள்ளார் ஆலங்குடி வெள்ளைச்சாமி. 'இதற்குத்தானே ஆசைப்பட்டாய்.. முருகேசா!' என எனக்கு நானே சொல்லிக்கொண்டேன்.

'தண்ணீர்ப் பீய்ச்சி அடியுங்கள் / கண்ணீர்ப் புகை வீசுங்கள் / சாலைகளில் குழி பறியுங்கள் / தடுப்புகளிட்டு அரணாக்குங்கள் / எல்லாவற்றையும் ஏறி மிதிக்கும் / பசித்தவன் வயிறு' எனும் வரிகளைவிட்டு இன்னமும் வெளிவராமல் சிக்கிக்கிடக்கிறேன் நான். ■

எம்.எம்.தீன்

# விவாதத்திற்கான புதினம்






**நூல் : வேங்குடி வயல்**

**ஆசிரியர் : அண்டனூர் சுரா**

புனைவு இலக்கியத்தின் தந்தை என்று அழைக்கப்படும் டி.ஆர்.ஆர். டோல்கின் அவர்கள் தன் எழுத்து குறித்து இப்படி சொல்வார். என் அதீத புனைவு பாத்திரங்களுக்குள் நவீன முகமற்ற அல்லது முகமூடி மனிதன் ஒளிந்திருக்கிறான்.

தமிழ் இலக்கியத்தில் அப்படியான படிமப் புனைவு இலக்கியங்கள் அதிகம் இல்லை. ஈஸாப் மற்றும் பஞ்சதந்திரக் கதைகள் எழுந்த காலத்தில் மனிதன் இப்படி நவீன அருவருப்பாக மாறி இருக்க வாய்ப்பில்லை. அதைப் புனைவாக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

அதைத்தான் தன் படிம விலங்கு, பறவை, பாம்பு பாத்திரங்கள் வழியாக ஒரு சிறப்பான விவாதத்திற்கான புதினமாக தனது “வேங்குடி வயல்” என்ற தலைப்பில் தந்து இருக்கிறார் அண்டனூர் சுரா.

மெல்லுடலிகளையும், மென்சிறகிகளையும், நச்சரவங்கள் தங்கள் அடிமைகளாக ஒடுக்கிவைக்கிற காலம் தகர்ந்த நிலையில், சதி செய்து தங்கள் அதிகாரத்தை மீட்டிக்கொள்ள விரும்பும் நிலையைக் குறித்து இந்தக் கதை பேசுகிறது.

மலம் கலக்கும் மனோபாவம் களையப்படவேண்டும் என்பதைக் குறிஞ்சிப்பாட்டில் கபிலர் பேசுவதிலிருந்து, மலர்கள், மரங்கள், பாம்பு வகைகள் என்று எல்லாமும் நிறைந்துள்ள புதினமாகத் திகழ்கிறது புதிய நாவல்.

நாற்கரம் பதிப்பகம் வெளியிட்டு இருக்கும் இந்த நாவல் என் கற்பனைக்கு விருந்தாக அமைந்த சமீப கால எழுத்து என்று எண்ணுகிறேன்.

■

செ.புனிதஜோதி

# அகம் புறமிடையே தவழும் ஓவியம்



**நூல் : அந்திச்சுழியம்**

**ஆசிரியர் : எஸ். சண்முகம்**

தனிமையில் இருப்பவனின் உள்ளொளி என்ன செய்யும்? இந்தப் பிரபஞ்சத்தைச் சுற்றி வரும். ஒவ்வொன்றிலும் அதற்கான வடிவத்தை, எண்ணத்தை அழகாய் அவதானிக்கும். அகக் குரலையும், புறக் குரலையும் ஒரே சமகோட்டில் நிறுத்தி வைத்துத் தன் அறிவு இதழால் பண்படுத்தும், பக்குவம் பயில்விக்கும், அதோடு கரைந்து வானவில் நிறப்பிரிகையைச் செய்து காட்டும்.

அப்படித்தான் எஸ்.சண்முகம் அவர்களின் அந்திச்சுழியம் கவிதைத்தொகுப்பு. அன்றாடம் கவனித்த, கவனிக்கத் தவறிய நடைமுறைச் செயல்களைக் கவிதைக்குள் கொண்டுவந்து மற்றொரு நிறத்தைக் காட்டியுள்ளார்.

நிறமற்ற மனத்தில், நினைவின் மொழி, வெவ்வேறு நிறங்களைக் குழைக்கிறது என்கிறார் கவிஞர் பழநிபாரதி அவர்கள்.

கிராமத்தின் வாசலில் பள்ளி கொண்டவன், நகரத்து வாசலுக்குள் வந்து, நகரத்தோடு நகரமாய் இல்லை, நெருக்கடியோடு நெருக்கடியாய் இறுகி, உழன்று, வெறுத்து, ஓய்ந்த சமயத்தில் ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில் பேசாத மனிதர்கள் தம் கதவுகளை மூடிக்கொண்டு இருக்கும் வேளையில் கவிஞனின் மனநிலை அதனை உள்வாங்கி அகத்தையும், புறத்தையும் ஒரே நேர்க்கோட்டில் நிறுத்திப்பார்த்தால் அழகிய ஓவியம் கைகூடிவிடும், அப்படியான ஒரு கவிதை.

“சுவர்களில் மரச்சட்டகத்துள் உள்ளோர் உட்பட
அனைவரும் பேசிக்கொண்டிருக்கின்றனர்
என் உச்சி அமைதி சூடியுள்ளது
உடனிருத்தலின் பெண்குரலொன்று
ஒரு நீரலை போலும் மேல்விழுந்து”

என்பதில் ஜென் பார்வை அங்கே புலப்படுகிறது.

கவிஞன் கருணை மிக்கவன். அவன் காணும் எளிய மனிதனின் விரல் பற்றி விசாரித்து, அவன் உள்ளொளிக்குள் உட்புகுந்து அவதானிக்கும் தீர்க்கதரிசியும் கூட.




"பொருள் பணமாகும் நொடியும்
கடந்து வந்த தெருக்களும் முகங்களும்
அவருள் குரலாகவே சேர்ந்து நகர்ந்துவிடும்"

பறவையும் மரங்களும் இயற்கையும் கவிஞனின் மற்றொரு இதயம். அந்த ஆன்மாவோடு கலந்து ஐக்கியமாகிவிடுவான், தன் கடமையைத் தொலைத்துக் கற்பனையின் சிறகுகள் ஏறிப் பறக்கும் பறவையாவான்.

"வயலெட் உடலெங்கும் வெண்புள்ளிகள்
இரைந்துள்ள
கையளவு பறவையின் அலகில்
கிழக்கு தகதகப்பதைப் பார்ப்பதைவிட
வேறெது முக்கியம்
பற்பசை உலரட்டும்"

என்கிறார்.

இப்படி ஒவ்வொரு கவிதையும் ஒரு கருத்து கற்பனை தானம். அந்தி என்பது பகலையும் இரவையும் கைப்பற்றி எப்படி எதுவுமற்ற சுழியத்தைப் போல் ஆகிவிடுமோ, அதுபோல் மனம் வரையும் பிம்பத்தை அந்த ஆரஞ்சு சுழியத்தை அழகாய்க் கைப்பற்றி நவீனக் கவிதை வெளியில் புனைவு வடிவத்தைக் கவிஞர் எஸ்.சண்முகம் பரிசளித்துள்ளார்.

நயினார்



# சுண்டக் காய்ச்சிய வரிகள்




**நூல் : அந்தியில் பூத்த நந்தியாவட்டை (ஹைக்கூ கவிதைகள்)**

**ஆசிரியர் : அ.சுந்தர செல்வன்**

கவிஞர் சுந்தர செல்வன், தனது "அந்தியில் பூத்த நந்தியாவட்டை" ஹைக்கூ கவிதைத் தொகுப்பில், சொற்களைச் சுண்டக் காய்ச்சி வரிகளை லேகியமாகத் தந்திருக்கிறார்.

படபடக்கும் தேசியக்கொடி
பறக்கும் தன்மானம்
தலித் ஊராட்சித் தலைவர்

ஊராட்சித் தலைவரே என்றாலும் அவர் தலித் என்றால், கட்டி வைத்திருக்கும் தன்மானம் பறந்துபோகும் நிலையிலிருந்து இன்னும் மாறாமல் இருக்கும்போது, பறக்க வேண்டிய தேசியக்கொடி படபடக்கத்தானே செய்யும்.

பக்தர்களின் வசதிக்காக
பல இடங்களில் அமைத்தார்கள்
உண்டியல்

என்னவொரு அழகிய முரண் என்றா நினைத்தீர்கள்? இல்லை. நெற்றிப்பொட்டில் அடித்துச் சொல்கிறார் கவிஞர். உண்டியலை நிறைப்பதே, பாவத்தைப் போக்கும் பரிகாரமென்பது மக்களின் இப்போதைய கண்டுபிடிப்பு. எப்படியும் சம்பாதிக்கலாம், மனசாட்சியை மௌனமாக்கக் கோயில் உண்டியலில் பணத்தைப் போட்டால் போதுமென்று, அந்த சாமிக்கும் லஞ்சம் கொடுக்க வசதியாகத்தானே பல இடங்களில் உண்டியலை அமைத்திருக்கிறார்கள்.


இப்படி நூலில் உள்ள கவிதைகள் அனைத்தையும் வாசிக்கும்போது மனதில் ஓராயிரம் பூக்கள் பூப்பதை உணரலாம்.

வாசிப்பு 2024

ப்ரியா வெங்கடேசன்



# நிஜ உருவங்கள்




**நூல் : நேர்மை படும் பாடு (கட்டுரைகள்)**

**ஆசிரியர் : ஞான ராஜசேகரன்**

ஐ.ஏ.எஸ். அதிகாரி, திரைப்பட இயக்குனர், எழுத்தாளர் எனத் தான் களமிறங்கிய துறைகளிலெல்லாம் உச்சம் தொட்டவர், ஞான ராஜசேகரன். இவரது எளிமையான சொல்லடுக்கில் இயல்பான வார்த்தைகளாய் விரியும் சம்பவங்கள் அனைத்தும் அழகிய காட்சிமா அனுபவம்.

நேர்மை பற்றிய பொதுப்புத்தியைப் புரட்டிப்போடும் இவரது எழுத்துக்களின் ரசிகன் நான். இயல்பாகவே இவருள் புதைந்திருக்கும் நகைச்சுவையுணர்வு எழுத்துகளாய் வெளிப்படும் இடங்களிலெல்லாம் அத்தனை துள்ளல். அதேபோல், பாதிக்கப்பட்டவர்களின் பக்கம் நின்றே எல்லாவற்றையும் அணுகும் இவருடைய இயல்பும், எழுத்தை ஆத்மார்த்தமாக வாசிக்கத் தூண்டுகிறது.

‘நேர்மையை வலியுறுத்தி சினிமா எடுத்தவர்கள்’ சென்சார் கட்களிலிருந்து தப்பிக்க நேர்மையற்ற வழிகளில் முயற்சிக்கும் முரண்களை நாம் படித்துணர்கையில் அவர்களின் மீதொரு அசட்டுப்பார்வை.

அரசியல்வாதிகளை இவர் ‘டீல்’ செய்த விதங்களெல்லாம் அல்டிமேட். திரைப்படத் தணிக்கைத்துறையில் இவருடைய செயல்பாடுகளை விளக்கும் கட்டுரையில், பல இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள், முன்னணி நடிகர்களின் நிஜ உருவங்கள் தோலுரிந்து நிற்கின்றன.

“இந்திய ஆட்சிப்பணியும் சினிமாவும் மற்றும் நானும்” எனும் இவரது முந்தைய நூலை வாசித்தவர்களுக்கு “நேர்மை படும் பாடு” அதன் தொடர்ச்சியாகவே தோன்றும். ஒரே அமர்வில் வாசித்துவிடும்படியான இவரது இந்த இரு நூல்களையும் தொடர்ச்சியாக வாசிக்கவே நான் பரிந்துரைப்பேன்.

வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்



# உடைத்துப் பேசும் கவிதைகள்

நூல் : ஙகர மிட்டாய்


ஆசிரியர் : ப்ரியா வெங்கடேசன்

தமிழ்மொழியில் அதிகம் பயன் படுத்தப்படாத ஙகர எழுத்துக்களின் மீதான ஈர்ப்பின் காரணமாக, அதற்கு ஆதரவளிப்பதற்காக 'ஙகர மிட்டாய்' என்ற தலைப்பைத் தேர்ந்தெடுத்ததாக இந்நூலின் ஆசிரியர் ப்ரியா வெங்கடேசன் கொடுத்துள்ள விளக்கமே இந்நூலுக்குள் ஆர்வத்தோடு பயணிக்கவைக்கிறது.

இடக்கரடக்கல் என்ற சொல்லுக்கான அர்த்தத்தை ஒரு கவிதை மூலமாகவே புரியவைக்கிறார். பூப்பெய்திய பெண்ணின் மனவோட்டத்தையும் சங்கடத்தையும் மறைபொருளாகக் கவிதையில் சிறப்பாக உணர்த்துகிறார்.

'இன்றிலிருந்து எந்த மூன்று நாளும் அந்த மூன்று நாள் ஆகலாம்' என்ற வரியில் அப்பெண்ணின் பதைபதைப்பை நமக்குக் கடத்துகிறார். அத்தனைக்காலமும் தன்னியல்பாகத் திரிந்த குழந்தை, பூப்பெய்திய பின்னர், அந்த மூன்று நாட்களின் வருகையை எண்ணி முதன்முறை பயப்படுவதை லாவகமாக இந்த வரியில் குறிப்பிடுகிறார். அந்த பெண், மருந்துக்கடையில் பணியாற்றுகிறாள். மருந்துக்கடையில் விடாய்க்கால அணையாடையையும் விற்பார்கள். ஆண்களுக்கான ஆணுறையையும் விற்பார்கள். அங்கே இப்பெண் பணியாற்றும்போது ஓர் ஆண் வந்து, எந்தெந்தச் சுவையிலான ஆணுறைகள் இங்கே விற்பனையாகின்றன எனக் கேட்டால் அவளது மனது எப்படி சங்கடப்படும் என்பதையும் கவிதையாக்குகிறார். இப்படியாக இவரது ஒவ்வொரு கவிதையுமே குட்டிக்குட்டி சம்பவங்களைப் போல், பேசாத பொருளையெல்லாம் பேசிச்செல்கின்றன.

ரம்மி விளையாட்டின் சூட்சுமத்தையெல்லாம் கவிதைக்குள் நுழைத்திருக்கிறார். நாவினால்





சுட்ட வடு என்ற கவிதையில் கலவியின் நுட்பத்தைக் கவித்துவமாய் விவரித்து, உச்சம் தொடுமுன் விலகிடும் ஆணால் பெண்ணுக்குக் கிடைக்கும் தண்டனையையும் சுட்டிக்காட்டுகையில் கவிதை பூரணத்துவம் பெறுகிறது. அதிகபட்ச சுகத்தை அளித்து, சுமைகளை மட்டுமே சுமந்து, சமத்துவமில்லா ஆணோடு வாழும் பெண்மையின் வலியையும் வரிகளில் கடத்துகிறார். பயணத்தில் முடியும் பாதை என்ற கவிதையில் ஒரு கிராமத்து முக்கோணக் காதல் கதையையே க்ளைமாக்ஸ் பரபரப்பு சேர்த்துச் சொல்லியிருப்பது திரைப்படம் போல் பார்வையில் விரிகிறது. இப்படியாக, இவரது கவிதைகளில் உலாவும் சொற்களில் பூடகங்கள் இருக்கின்றன. தவிர, சமூகத்தால் பேசப்படாமல் மூடிவைக்கப்பட்ட அனைத்தையும் வலுவாக உடைத்துப் பேசும்படியான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றன.

ஸ்ரீவாரி மஞ்சு

# பொறி பறக்கும் கவிதைகள்






**நூல் : நிலாக்கூடை**

**ஆசிரியர் : அமுதா தமிழ்நாடன்**

உணர்வுக் குவியல்களை இலகுவாக நம் இதயத்தில் சுமக்க வைக்கும் வித்தையை விந்தையாகச் செதுக்கி இருக்கிறார் ஆசிரியர் அமுதா தமிழ்நாடன். அற்புதமான சொல்லாடல்களைக் கிராமிய மண் வாசனை கலந்த பசுமை மணத்தோடு நிலாக்கூடைக்குள் ஒளித்து வட்டாரமொழியை நினைக்க வைக்கிறார்.

புதுமைப்பித்தனை வாசிக்க நினைக்கும் மனசு சமையல்கட்டையே வாசிப்பதைக் கடிவாளமிட்டும் மீட்கமுடியாத ஆதித்துருவை இத்தனை எளிமையாய் இயம்பிட இயலுமா? வியர்த்து வியந்தேன் பெரும் பயணத்தில், முட்டி மோதி வான் கிழித்துத் தரை மோதி நதியோடி கடல் கலக்கும் பெரும்மழை நானெனக் கொண்டாடும் திமிரை. எனக்கு ஒவ்வாத காலத்தை முறம் கொண்டு அடித்துத் துரத்தும் ஆதி தமிழச்சியும் நானே... பெண்ணிய சிலிர்ப்பான முத்திரை வரிகள்.


நடுத்தர சாமானியன் குடும்பம் நடத்த எத்தனை குட்டிக்கரணங்கள் போட வேண்டியுள்ளது அதுவும் குடும்பத்தலைவிக்கு. அதையும் வெறுப்பாக்காது இனிக்கத்தான் செய்கிறது வாழ்வென அழகாக்கிய பெருந்தன்மை கவிதை அழகியல்.

தவிர்த்துப் போவதும் தவிர்க்க விடுவதும் தவிப்புகளும் தவிப்படங்கிப் போவதும் பழகிய தியாகங்களும் கூறும் கவிதைகள் பழக்கப்படுத்தப்பட்ட தியாகங்களை ஏற்றுக்கொண்டாலும்... சாடவேண்டிய இடத்தில் அக்கினி பொறி பறக்கவைத்துவிடுகின்றன. 2024இல் படித்த பெண்ணியக் கவிதைப் புத்தகங்களில் நிலாக்கூடை நிலவைத் தொட்டுவிடும் தூரத்தில் அதி அற்புதமாக உள்ளது. ■

## இலக்கியா விஜய்



# நினைவுப்பேழை




நூல் : 90'ஸ் கிட்ஸ்

ஆசிரியர் : பிரபு சங்கர்

நிற்க நேரமில்லாமல் இயந்திரத்தனமாய் இயங்கிக்கொண்டிருக்கும் இந்த நவநாகரீகக் காலத்திற்கு முந்தைய காலம் 90களின் பொற்காலம். நிதானமாகவே நகர்ந்தது, நிறைவான வாழ்வாக அமைந்தது. அந்தக் காலகட்டங்களைப் படம் பிடித்தது போல் முத்து முத்தான கவிதைகளைக் கொண்டுள்ளது காலத்தின் கண்ணாடியாக "90'ஸ் கிட்ஸ்" கவிதை நூல். தற்போதைய தலைமுறையும் பொறாமைப்படும் பெருவாழ்வின் அங்கங்களை அழகழகாய் அடுக்கிக்கொண்டே போகிறது எல்லாக் கவிதைகளும். கவிஞர் தான் வாழ்ந்த வாழ்வை சக மனிதர்கள் அப்போது வாழ்ந்த அந்த வாழ்வை அதே சுவையுடன் ரசிக்கும்படி எழுதியிருக்கிறார். அவருடைய நினைவுகளும் ஞாபக சக்தியும் வியக்க வைக்கின்றன. இப்போது வராதா என ஏங்க வைத்த நாட்களின் நினைவுப்பேழை இந்த 90'ஸ் கிட்ஸ் புத்தகம்.


அப்போதைய அழகிய வாழ்வியலை வெறும் வாய்வழியே சொல்லிக் கடத்திக்கொண்டிருப்பதைத் தவிர்த்துப் புத்தகத்தை வாங்கிப் படித்து நாமும் நம்மை நம் நினைவுகளில் சில நேரம் லயித்திருக்க வைக்கலாம்.

வாசிப்பு 2024

கி.சரஸ்வதி

# அடர்த்தியாய்ச் சுடரும் ஹைக்கூக்கள்






**நூல் : யானையின் தும்பிக்கையும் புத்தரின் கரமும் (ஹைக்கூ)**

**கவிஞர்: ரகுநாத் வ**

**த**னக்குள் பயணிக்கும் நுண் உணர்வைத் தரும் வல்லமை கொண்டது ஹைக்கூ. துளியூண்டு குழந்தையைக் கையாளும்போதுதான் அந்த அனுபவத்தின் விஸ்வரூபம் புரியக் கிடைக்கும். சில வார்த்தைகளுக்குள் பேரனுபவம் அருளும் இவ்வகைக் கவிதைகளை வசப்படுத்தியுள்ளார் கவிஞர். வியப்பும் புன்னகையுமாகக் கலவையான உணர்வுகளுடன் விரைவாகப் படித்துவிட்டு மெதுவாக அசைபோடத் தகுந்த கவிதைகளை உள்ளடக்கியுள்ளது இந்நூல். விவரிப்பதில் அல்ல.

கருப்பொருளின் அடர்த்தியில் சுடர்வதே ஹைக்கூ. ஒவ்வொரு கவிதையிலும் அதற்கு நியாயம் செய்திருக்கிறார் இவர்.

ஹைக்கூ, இயற்கையை அதன் எல்லையற்ற இயல்பைப் போற்றி ரசிப்பதற்கானது என்பதுடன் வாழ்வியலைச் சட்டென்று போதிப்பதற்கான மொழிக்கருவி என்பதை நன்கு புரிந்துகொண்டு இக்கவிதைகளைப் படைத்திருக்கிறார்.

வெளியில் செல்லக்
கதவைத் திறக்கிறேன்
உள்நுழைகிறது ஒளி

சிறு ஊற்றில் அகப்படுகிற
திமிங்கலத்திற்கு
ஹைக்கூவின் இதயம்

இரையற்ற தரையினையும்
முத்தமிடுகிறது
நுண் அலகு

இவை போன்ற கவிதைகள் வாசக நுட்பத்தைக் கோரி நிற்பன.

இனிய அனுபவமாக அமைகிறது இந்நூலை வாசிப்பது. ■

சண்முகசுந்தரம்



# எழுத்தாகும் நினைவுகள்




நூல் : ஞாபக ஊற்று (கட்டுரைகள்)


ஆசிரியர் : கலாப்ரியா

கலாப்ரியாவின் நினைவாற்றலை நினைத்து நான் வியப்படையாத நாளே கிடையாது! ஏற்கனவே இவருடைய முந்தைய தொகுப்புகள் நினைவின் தாழ்வாரங்கள், உருள் பெருந்தேர் மிக முக்கியமான தொகுப்புகள். மீண்டும் அதே வரிசையில் இந்த ஞாபக ஊற்று. இதில் 32 கட்டுரைகள். தனது பால்யத்தைப் பற்றியும், பாவண்ணன், நகுலன் பற்றியும் எழுதியுள்ள கட்டுரைகள் மிகப் பிரமாதம். ஒரு மூத்த படைப்பாளியாகத் தன் சிறு வயது முதல் இன்றைய நாள் வரை தனது நிகழ்வுகளைத் தன் எழுத்தின் மூலம் அழகாக்குபவர் கலாப்ரியா. அதை மீண்டும் இந்த "ஞாபக ஊற்று" மூலம் நிரூபித்து இருக்கிறார்.

லாஸ்யா

# கனமாக்கும்... பறக்கச்செய்யும்...






**நூல் : காளஞ்சி (கவிதைத் தொகுப்பு)**

**ஆசிரியர் : அன்பு மணிவேல்**

காளஞ்சி என்றால் பிரசாதம் என்று செட்டிநாட்டில் வழக்கமாம். இக்கவிதைத் தொகுப்பும் படிப்பவர்களுக்கு நிச்சயம் பிரசாதம்தான்.

காதல், அன்பு, சோகம், இயற்கை, சமூக அக்கறை என அனைத்துத் தளத்தையும் கவிதையால் தொட்டிருக்கிறார்.

'என் மனமுடைந்த
சொற்களின்
தற்கொலைக்குத்தான்
நீங்கள்
மௌனம் என்று
பெயர் சூட்டுகிறீர்கள்'

இது ஒன்றே போதும் மற்ற கவிதைகளைப் பற்றிப் பேச..

பெண்கள் அடுக்களையில் விம்மும் மெலிதான அழுகை சத்தம் கேட்கும். அடுக்களையிலிருந்து வெளிவரும்போது கைகளையும் முகத்தையும் துடைத்துக்கொண்டே வரும்போது தன் மனதின் சோகத்தையும் அங்கேயே போட்டுவிட்டு வருவார்கள். காளஞ்சியில் இதை அப்படியே உணரமுடியும்.

மனதைக் கனமாக்கவும் செய்யும், இறகுபோல பறக்கவும் செய்யும் கவிதைத் தொகுப்பு இந்தக் "காளஞ்சி".

■

ஜே.ஜே.அனிட்டா

# கனமான கவிதைகள்






நூல் : நூல் பொம்மை (கவிதை தொகுப்பு)

ஆசிரியர் : ஜே.ஜே.அனிட்டா

இந்நூல் என்னுடைய மூன்றாவது தொகுப்பு. கோதை பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

கவிஞர் மொழிபெயர்ப்பாளர் ஸ்ரீ என் ஸ்ரீவத்ஸா அவர்களால் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டு இருமொழி கவிதைத் தொகுப்பாக வெளிவந்துள்ளது. சமூகப் பிரச்சினைகள், அரசியல், பெண்ணியம், காதல், வாழ்வியல் தத்துவங்கள் என அனைத்து அங்கங்களிலும் புனைவு அதிகம் அல்லாத நிதர்சனக் கவிதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. சென்னை புத்தகத் திருவிழாவில் கவிஞர் வண்ணதாசன் அவர்களால் இந்நூல் வெளியீடு செய்யப்பட்டது. மிகவும் கவனமாக கனமாக எழுத்தின் மீதான பல்வேறு விசாரணைகள் மற்றும் தேர்ந்த மொழி நடையோடு இப்படைப்பைத் தந்துள்ளேன். அதற்கிணையாக அதன் ஆங்கில மொழியாக்கமும் திறம்படச் செய்யப்பட்டுள்ளது.

ஜெய்ப்பிரகாஷ்

# தன் மகரந்தச்சேர்க்கை




**நூல் : வண்டுகள்**

**ஆசிரியர் : மான்விழி ரஞ்சித்**

ஆண் / பெண் பருத்திப் பயிர்களைத் தனித்தனியே பயிரிட்டு அதனைப் பராமரித்து, இயற்கையான மகரந்தச் சேர்க்கையை விடுத்து செயற்கையான மகரந்தச்சேர்க்கைக்குக் குழந்தைகளை ஈடுபடுத்திப் பணம் கொழிக்கும் முதலாளிகள்.

இந்தப் பணிக்காகக் குடும்பமாக வரும் பெண்களுக்கு உழைப்புக்கு மட்டுமல்ல அவர்களின் உடலுக்கும் சேர்த்தே கூலி காவுவாங்கிக் கொடுக்கப்படுகிறது.

பருத்திக் காட்டைச் சுற்றிய வேலை, மொட்டுக்களை விரித்து விரித்து விரல்களில் ஏற்படும் வலி. அவர்களின் வாழ்க்கை




அவர்களின் மொழியில் எழுதப்பட்டிருக்கும் நாவல்.

இத்தனையும் சகித்துக்கொண்டு குழந்தைகளுடன் அங்கு வாழ்ந்து என்ன ஆகப்போகிறது என்ற உள் அழுத்தத்தையும் விஞ்சி வறுமை வாசிப்பவரை அழுத்துகிறது, எழுத்தாளர் மான்விழி ரஞ்சித் அவர்களின் வண்டுகள்.

■

கரிகாலன்



# விடுதலையைத் தேடும் கதைகள்

ஒருநாள் நள்ளிரவு. சேலம் எக்ஸ்பிரஸில் விருத்தாசலம் திரும்பியிருந்தேன். பைக்கை எடுத்து வீடு திரும்பும் வழி. சாலையின் மையத்தில் பைத்தியக்காரப் பெண்ணொருத்தி இரண்டு கால்களையும் நீட்டி, முழங்காலில் தலைகவிழ்ந்து உறங்குகிறார். ஒரு கணம் திக்கென்றாயிற்று.

பிறகு, ஒருநாள் நள்ளிரவு. பெரியார் நகர் ஏடிஎம்மைத் திறந்தேன். அங்கு தலைவிரி கோலத்தில் ஒரு பெண் சுவரில் சாய்ந்தபடி உட்கார்ந்து தூங்கினார். அவரும் மனநலம் பாதிக்கப்பட்டவர்.

ஒரு நகரில் பத்து பைத்தியக்காரர்கள் உலவினால் அதில் ஏழு பேர் பெண்கள். உண்மையில் இவர்கள் பைத்தியங்களா?

ஆமினா முஹம்மத்தின் நிகாடு தொகுப்பில் ‘சாஜிதா மாமி கேஸ்’ என்றொரு கதை. இன்றிரவு படித்தேன். எனக்கு அமினாவை நினைத்தால் வியப்பு. சின்ன வயசு. இந்தப் பெண்ணுக்கு எப்படி ஒரு புராதன இதயம்? வியக்கிறேன்.

இந்தத் தொகுப்பை அனுப்பி முன்னுரை கேட்டிருந்தார் ஆமினா. கவிதையாக இருந்தால் உடனடியாக எழுதிவிடுவேன். அவர் கேட்டபோது எனக்கு நேரமில்லை. மேலும் அவரது தொகுப்புக்கு என்னைவிடவும் சீனியர் ரைட்டர் ஒருவரிடம் வாங்கினால்

சிறப்பாக இருக்கும் என எண்ணினேன்.

‘வண்ணதாசன், உதயசங்கர் இருவரில் ஒருவரிடம் கேட்டு வாங்குங்கள்’ என்று கூறினேன். உதயசங்கர் அவர்கள் இந்நூலுக்கு ஓர் அற்புதமான அணிந்துரையை வழங்கியிருக்கிறார்.

நம் பெண்களிடம் நிறைய கதைகள் இருக்கின்றன. சிலருக்குச் சொல்ல நேரமில்லை. சிலர் சொல்ல விரும்புவதில்லை. பெண்கள் கதை சொல்ல ஆரம்பித்தால் ஆண்களால் நிம்மதியாக இருக்க முடியுமா? என்கிற நல்லெண்ணம் காரணமாக இருக்கலாம்.


ஆனால் நிறைய ஆண்களுக்கு, நாம் பெண்களுக்கு ஓர் இடையூறாக இருக்கிறோம், என்பதே தெரியவில்லை.

நிகாடு என்றால் கொடுமை. ஆண்கள் மட்டும் பெண்களைக் கொடுமைப் படுத்துவதில்லை. அவர்கள் தங்கள் சாயலில் உருவாக்கியிருக்கும், பெண்களாலும் பெண்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள்.

இந்தக் கொடுமைகளிலிருந்து மீள, விடுதலையைப் பெண்கள் தேடும்போது, அது மரணமாக அவர்கள் முன்னால் நிற்கிறது. இப்படி மரணத்தின் முன்னால் போய் நின்ற பெண்கள், என்ன சொல்ல விரும்பினார்கள்?

அதை நிகாடு மூலம் சொல்கிறார் அமீனா.

நம்மோடு வாழ்பவர்களை நாம் எப்படி




அடையாளப்படுத்துவோம்? கருப்பாக, பல்லெடுப்பாக, தொப்பை வயிற்றோடு, வழுக்கையாக.. இப்படி தோற்றத்தை வைத்து, தட்டையாக மனிதர்களை அடையாளப்படுத்துகிறோம். ஆனால் ஆமினாவோ, ‘சாஜிதா மாமி’யை எப்படி அடையாளப்படுத்துகிறார்? என்பதுதான், சாஜிதா மாமி கேஸ்.

இங்கு பைத்தியமாக பெண்கள் வாழ்வது, மரணத்தைத் தவிர்த்த, மாற்றுத் தேர்வு என்கிறார் அமீனா. நிசம்தான்.

The Madness of Women Myth and Experience என்றொரு நூல். Jane M. Ussher எழுதிய நூல். Women and madness மற்றொரு நூல். செஸ்லர் எழுதியது. இருவரும் பெண் உளவியலாளர்கள்.

இந்தப் புத்தகங்கள், இச்சமூகம் தான் பேணுகிற கலாச்சாரம், வரலாறு மற்றும் பொருளாதாரச் சக்திகளின் அழுத்தத்தின் வழியாகவே, பெண்களைப் பைத்தியமாக்குகிறது என்கின்றன.

பெண்களைத் தவறாக நடத்துதல், குறிப்பாக பாலியல் ஒடுக்குமுறை, பாலியல் ரீதியான வன்முறை, மையச்சமூகம் உருவாக்குகிற முன்மாதிரி பெண் போன்ற மதிப்பீடுகள், பெண்ணை மனச்சோர்வு, மனச்சிதைவு நோக்கித் தள்ளுகின்றன. இங்கு 'நார்மல்' என்கிற சொல்லே ஆண் நோக்கில்தான் கையாளப்படுகிறது. மனநிலை குன்றிய பெண்கள் குறித்த ஒரு வலிமையான conciseஐ, இக்கதை இச்சமூகத்தில் உருவாக்குமென நம்புகிறேன்.

மனநிலை குன்றிய பெண்களின் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். மனநலக் காப்பகங்களில் இத்தகைய பெண்களின் தலைகள் மழிக்கப்படுகின்றன. அவர்களுக்குப் பொடுகு, பேன் நீக்க, ஷாம்பு தருவது செலவு பிடிப்பதாகக் கருதப்படுகிறது. இத்தகைய பெண்களைக் கும்பலாக நிறுத்தி ஆண் ஊழியர்கள் குளிப்பாட்டுவதும் நடக்கிறது. நாகரீகம் நிறைந்த நாடுகளில் மனநலம் குன்றிய பெண்களுக்கு மாதவிடாய் நாட்களில் நாப்கின் வழங்கப்படுகின்றன .

இக்கதைகளின் இன்னொரு சிறப்பு அவற்றின் மொழிவளம். இங்கு மனிதர்கள் பேசுவதைக் கேட்பதையே மறந்துவிட்டோமோ? எனத் தோன்றும். சினிமா, சீரியல் வசனங்களையே ஒரு தலைமுறை 'பேச்சு' என நம்புகிறது. அமீனாவின் மாந்தர்கள் இன்னும் நம் சொற்களைப் பாதுகாக்கிறார்கள்.

நாம் சுதந்திரமாக, மகிழ்ச்சியாக வாழத் தடையாக, எங்கெங்கெல்லாம் அடிமைச் சங்கிலிகளை ஒளித்து வைத்திருக்கிறோம்? ஆமினா தேடிக்கொண்டே இருக்கிறார். இவ்வகையில், ஆமீனா சின்ன வயசு காந்தியைப் போலவும் இருக்கிறார். நான் ஓர் ஆணென்பதால் அவரைக் காந்தியோடு ஒப்பிட வேண்டியதாகிறது.

நிகாடு சிறுகதைத் தொகுப்பை வாங்கிப் படியுங்கள். இதை நம் வீட்டுப் பெண் எழுதவில்லை, என்பதால் நம் வீட்டில் கொடுமை நடக்கவில்லை! என்பதாகாது. ஏனென்றால் பலருக்கு, கொடுமை என்றால் என்ன? என்றே தெரியவில்லை. அது பாலியல் கொடுமை என்றில்லை. ஒரு சொல், ஒரு விலகல், ஒரு புறக்கணிப்பு, எந்த வடிவத்திலும் இருக்கலாம்.

சமீபமாக, என்னைச் சில பெண்கள் கவர்கிறார்கள். பாயல் கபாடியா, கனி குஸ்ருதி, ஆமினா என நீண்ட பட்டியலது.

 கு.ஜெயபிரகாஷ்




# 'ரசனையும் எதிர்பார்ப்பும் மாறிக்கொண்டிருப்பவை..'

## கவிஞர் ந.பெரியசாமியுடனான நேர்காணல்

கவிஞர் ந.பெரியசாமி, 1990இல் கவிதைகள் எழுத ஆரம்பித்தவர். 2004இல் முதல் கவிதைத் தொகுப்பான 'நதிச்சிறை' வெளிவந்தது. ஐந்து கவிதைத் தொகுப்புகள் வெளியிட்டுள்ளார். தொடர்ந்து கவிதைகள், நூல் விமர்சனங்கள், கட்டுரைகள் எழுதிவருகிறார். 'மொழியின் நிழல்' என்ற கட்டுரைத் தொகுப்பு வெளியிட்டுள்ளார். 2021இல் 'கடைசி பெஞ்ச்' என்ற இளையோருக்கான இணையக் கவிதைத் தொகுப்பு வெளிவந்தது. பின்னர் அச்சிலும் வந்துள்ளது. ஆங்கிலத்தில் மலர்விழியும், தெலுங்கில் ரகுபதியும் இத்தொகுப்பை மொழியாக்கம் செய்துள்ளனர். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் கே.சி.எஸ் அருணாச்சலம் நினைவு விருது, கலகம் விருது, அசோகமித்திரன் படைப்பூக்க விருது போன்றன இவர் பெற்ற விருதுகள். கவிஞர் ந.பெரியசாமியுடனான ஒரு நேர்காணல்..

**இளமைக்காலத்தில் இருந்து தற்போது வரையில் தாங்கள் பெற்ற வாசிப்பு அனுபவம் / பரிணாமம் பற்றி?**

படிக்கும் காலத்தில் திண்ணையில் தாத்தாவின் கட்டில் அடியில் படுத்துக்கொள்வது வழக்கம். அப்போது தாத்தா சிறுதொண்டர் புராணக் கதையைப்






பாடலாகப் படித்துக் கதை சொல்லியபடி இருப்பார். சிவன் மாறுவேடத்தில் வந்து பிள்ளைக்கறி கேட்டதாக வருமிடத்தில் சிறுதொண்டர் மனைவி உருக்கமாகப் பாடுவது என்னை அழவைத்தது. இப்படியான கதைகளைத் தெரிந்துகொள்ள பாடப் புத்தகத்தைத் தாண்டி வேறு புத்தகங்களையும் படிக்க வேண்டும் என்ற எண்ணம் உருவானது.

ஊருக்குப் போனால் பஸ் நிலையங்களில் பெரியாரின் புத்தகங்கள் நாலணா, எட்டணாவிற்குக் கிடைக்கும். அதையெல்லாம் வாங்கி வாசிப்பேன். ராஜேஷ்குமார், பட்டுக்கோட்டை பிரபாகர் பாக்கெட் நாவல்கள் வாசித்தேன். சலிப்பு ஏற்பட பாலகுமாரன் பேய் பிடித்தது. வெறிகொண்டு வாசித்தேன். வேலை நிமித்தமாக ஒசூருக்கு வந்து சேர்ந்தேன். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அறிமுகம் கிடைத்தது. சிறு பத்திரிக்கை, கலை இலக்கியச் செயல்பாடுகள், விரிவான பரந்துபட்ட வாசிப்பு உருக்கொண்டது. வாசிப்பு என்பது பொழுதுபோக்கு அல்ல வாழ்வு எனும் மனப்போக்கு உருவான காலகட்டமது. எப்பொழுதும் பேண்ட் பாக்கெட்டில் ஏதேனும் புத்தகத்தை வைத்திருப்பேன். கம்பெனியில் நேரம் கிடைக்கும்போதெல்லாம் அப்பப்போ டாய்லெட்டுக்குள் சென்று பக்கெட்டை கவிழ்த்துப் போட்டு உட்கார்ந்து படித்துவருவேன். சுருங்கச் சொன்னால் வாசிப்பே என் உயிராதாரம்.

**எழுத வேண்டும் என்ற எண்ணம் எப்போது, எப்படி உருவாகியது?**

கதை கேட்பது, தெருக்கூத்து பார்ப்பது, ஒப்பாரிகளை ரசிப்பதென சிறு வயது பழக்கங்கள் இருந்தன. யாரோ எழுதியதை வேறு யாரோ சொல்லக் கேட்கையில் அழுகை, சிரிப்பு, கோபம் வருகிறதே, அப்ப எழுதுவது முக்கியம். நாமும் எழுதவேண்டுமெனத் தோன்றியது.

பதினொன்றாம் வகுப்பு படிக்கையில் உடன் படிப்பவன் கவிதை எழுதுவான். அதனால் தோழிகள் அவனுக்கு அதிகமாக இருந்தார்கள். ஆசிரியர்கள் எதற்கெடுத்தாலும் அவனையே உதாரணம் காட்டினார்கள். என் எழுதும் எண்ணத்தைத் தீவிரப்படுத்தியதற்கு இதுவும் காரணம்.

### கவிதை மனம் என்பது?

உணர்வு நிலையானதாக இருத்தல் அல்லது காத்திருப்பைக் கவிதை மனமெனச் சொல்லலாம். அன்றாடச் செயல்பாடுகளில் நம்மை நெக்குருகச் செய்யும் கணங்களில் உறைந்து போதலையும் கவிதை மனமெனக் கொள்ளலாம். சட்டெனத் தோன்றி மறையும் நிகழ்வு.

### உங்கள் முதல் கவிதையை எழுதிய அனுபவத்தைப் பற்றிச் சொல்ல முடியுமா?

உடன் படிக்கும் தோழி சேஜிங்ரோஸ் வைத்துக்கொண்டு வருவாள். அது காலையில் வெண்மையாக இருக்கும், நேரம் போகப்போக அதன் நிறம் மாறிக்கொண்டே இருக்கும். மதியம் ரோஸ் நிறமாகிவிடும். ஒவ்வொரு பீரியடுக்கும் அதன் நிறமாற்றத்தை ரசிப்பேன்.

உன் மலரிலும்
மாற்றம் உண்டு
என் மனதிலும்
ஏக்கம் உண்டு
உன் மனதை
நான் அறிய
என்னவென்று
தூது செல்வேன்

இப்படித்தான் எழுதத் தொடங்கினேன்.





**கடைசி பெஞ்ச் / அகப் பிளவு இரண்டையும் தனித்தனியே வாசித்தால் வெவ்வேறு தளம். மிகுந்த மென்மையாகக் கையாள வேண்டும், கொஞ்சம் பிசகினாலும் தன்மை மாறிவிடும். அவற்றைக் கையாண்ட விதம் பற்றி?**

பஞ்சு மிட்டாய் எனும் சிறார்களுக்கான இதழ் நடத்திய பிரபு தற்போது லண்டனில் வசிக்கிறார். அவர்தான் தொடர்பு கொண்டு 'உங்களுடைய குட்டி மீன்கள் நெளிந்தோடும் நீலவானம் தொகுப்பை வாசித்தேன். கவிதைகளில் சிறார்களுக்கான மனஉலகை உணர முடிந்தது. நீங்க இளையோருக்கான கவிதைகள் எழுதுங்க. எழுத விரும்பும் இளையோர்களுக்குக் கொடுக்க முன்மாதிரியான தொகுப்பு ஏதுமில்லை. சிறார்களுக்கான பாடல் தொகுப்புகள்தான் நம்மிடையே இருக்கு' எனத் தொடர்ந்து வற்புறுத்தினார். ஒன்றிரண்டு கவிதைகள் முயற்சி செய்தேன். விஷ்ணுபுரம் சரவணன் மற்றும் தோழர் கமலாலயன் தந்த வழிகாட்டலில் கவிதை பிடிபட 13 லிருந்து 18 வயதுக்குட்பட்ட இளையோரின் மன உலகில் பயணிக்கும் தன்மையிலான கவிதைகளை எழுதினேன். அந்தக் காலகட்டத்தில் பிற கவிதைகளை எழுதவில்லை. இளையோருக்கான மனப்போக்கோடே இருந்தேன். கடைசி பெஞ்ச் கவிதைத் தொகுப்பு தமிழ் இலக்கியத்தில் இளையோருக்கான முதல் கவிதைத் தொகுப்பு.

அத்தொகுப்பின் மூலம் மாணவர்களோடு நிறைய்ய உரையாடினேன். பெரும் மகிழ்வான காலமது. கடைசி பெஞ்ச் தொகுப்பை மலர்விழி ஆங்கிலத்திலும், எழுத்தாளர் ரகுபதி தெலுங்கிலும் மொழிமாற்றம் செய்தனர். அகப்பிளவு தொகுப்பு காமத்தையும் காதலையும் பேசும் தொகுப்பு. பெரும் காத்திருப்புக்குப் பின் வந்த தொகுப்பு.

திருக்குறளில் இன்பத்துப்பால் அதிகாரக் குறள்களைத் திரும்பத் திரும்ப வாசித்து சங்க காலத்துக்கும் சம காலத்துக்குமான பிணைவை உருவாக்கும் முயற்சி. உள்ளுக்குள் கவிதைகள் தவறாக புரிந்துகொள்ளப்படுமோவெனப் பயம் இருந்தது. ஒரேவிதமான பாடுபொருளைக் கொண்ட கவிதைகள் என்பதால் வாசிப்பில் சலிப்பு ஏற்படாதவாறு இருக்கவேண்டுமென மெனக்கிடலோடு இருந்தேன். நிறைய்ய பாராட்டுதலை வாங்கித் தந்தது. எனக்கு நிறைவைத் தந்த தொகுப்பு.

**கவிதை எழுதும்போது உங்களுக்கு ஊக்கமளிக்கும் முக்கியமான காரணி என்ன?**

கவிதைச் செயல்பாட்டில் எப்பொழுதும் நாம் எழுத நினைத்ததை எழுதிவிட முடியாது. வெறுமையான மனதோடு இருக்கும்போது எதேனும் குழந்தை பார்த்துச் சிரிக்க தொற்றிக்கொள்ளும் உற்சாகத்தில் சொல் ஒன்று முகிழ்த்துக் கவிதைக்கு வேறு தன்மையைத் தந்துவிடும். இது மொழிக்கும் நமக்குமான மேஜிக். இந்த மேஜிக் தொடர்ந்து மொழிச் செயல்பாட்டில் இருக்கச் செய்திடுகிறது.

**உங்களின் எழுத்து நடை மீது எந்த எழுத்தாளர்கள் அல்லது கவிஞர்கள் அதிக தாக்கம் ஏற்படுத்தினர்?**

எழுதத் தொடங்கிய காலத்தில் ஒசூர் நண்பர்கள் ஆதவன் தீட்சண்யா பாதிப்பு லேசாக இருப்பதைப் போன்று இருக்கெனக் கூறினர். நாளடைவில் அது இல்லாது போனது.

என் கவிதைகள் மீது குற்றச்சாட்டும் உண்டு, நிலமும் சாதியும் தெரியாது இருப்பதாக. அதற்கு என் வாழ்வு முறையும் காரணமாக இருக்கலாம். பிறந்த ஊரில் நிலபுலன்களோடு வாழவில்லை. வளர்ந்த ஊரிலும்



அன்றாடங்காச்சியாகவே வாழ்ந்தோம். கடைசியாக, பிழைக்க வந்த ஒசூரையே சொந்த ஊராக மனம் சுவீகரித்துக்கொண்டது. இந்த ஊரின் தன்மையை என் எழுத்துக்கள் பிரதிபலிக்கலாம்.


**உங்களுக்குப் பிடித்த கவிதை எது? ஏன் அதைச் சிறப்பாக நினைக்கிறீர்கள்?**

இக்கேள்விக்கு ஆளுமைகளின் கவிதையைக் கூறி அவர்களின் நிழலைப் படியச் செய்து பெருமை கொள்ளலாம். உண்மை அப்படி அல்ல. நான் வாசிக்கும் நூல்கள் அனைத்திலுமிருந்து என்னுள் படிந்துகிடக்கும் இருளைப் போக்கும் ஒளிக்கீற்றுகள் கிடைத்தபடிதான் இருக்கின்றன. நாளை எழுத வருபவரிடமும் எனக்குப் பிடித்தது இருக்கும். இவரிவரெனும் பட்டியலுக்கும் கவிதைக்கும் இடம் போதாது. சகலரும் உன்னதமானவர்களே.

**ஒரு சிறந்த கவிதையை உருவாக்குவதற்கான முக்கியமான அம்சங்கள் என்ன?**


கவிதைகள் பெரும்பாலும் ஒற்றைத்தன்மை கொண்டதல்ல. சிறந்த கவிதை, சிறப்பில்லாத கவிதை எனத் திட்டவட்டமாகச் சொல்லமுடியாது. எனக்குப் பிடித்த கவிதை உங்களுக்குப் பிடிக்காத கவிதையாக இருக்கக்கூடும். ஏன் ஒரு சந்தர்ப்பத்தில் எனை ஈர்த்த கவிதை வேறொரு சந்தர்ப்பத்தில் சாதாரணமான கவிதையாகக் கூட மாறிவிடுகிறது. சிறந்த கவிதை என்பது அவரவர் சூழலும் மனப்போக்கும் சார்ந்தது. கவிதை என்பது மாறாத கணிதச் சூத்திரம் அல்ல.

**கவிதை எழுதும்போது எந்த நேரத்திலாவது “writer’s block” ஏற்பட்டுள்ளதா? அதை எப்படி சமாளிக்கிறீர்கள்?**








கட்டாயம் ஏற்படும். எழுதுவதில் மட்டுமல்ல, வாசிப்பிலும் block ஏற்படத்தான் செய்யும். எழுதும்போது ஏற்படுவதைத் தீவிர வாசிப்பைக் கொண்டும், வாசிப்பில் ஏற்படும்போது பயணிப்பின் மூலமும் சமாளிப்பேன். எத்தகைய சுவற்றை எழுப்பினாலும் ஒளி ஊடுருவும் சன்னமான திறப்புகள் இருக்கவே செய்யும்.

**உங்களின் கவிதை குறித்து வாசகர்கள் என்ன வகையான எதிர்வினைகளை வெளிப்படுத்துகிறார்கள்?**

வாசகர்கள் எண்ணிக்கை மிகுந்த பெரிய எழுத்தாளர் நான் இல்லை. சமகாலத்தில் எழுதிக்கொண்டிருக்கும் பெரும்பாலானோர் நண்பர்களாக உள்ளனர். கவிதைகளில் இருக்கும் போதாமைகளைச் சுட்டிக்காட்டியுள்ளனர். அவர்கள்தான் என்னைத் தொடர்ந்து எழுதவும் செய்கிறார்கள். வெளியூர்களுக்கு இலக்கியக் கூட்டங்களுக்குச் செல்கையில் முன்பின் அறிமுகமில்லாதவர்கள் கவிதைகளைக் குறிப்பிட்டுப் பாராட்டிப் பேசியதைக் கேட்டதுண்டு. உண்மையில் அது அவ்வளவு மகிழ்ச்சியாகவும் இருக்கும்.

மொழியின் மீதான பிரியத்தில் தேவைக்கு அதிகமாகச் சொற்களை பயன்படுத்துவதுண்டு. நண்பர்களின் சுட்டிக்காட்டலால் கச்சிதமான மொழித்தேர்வைக் கையாளப் பழகிக்கொண்டேன். அதற்கு முக்கியக் காரணமானவர் கவிஞர் சாகிப்கிரான். எனது கவிதைத் தொகுப்புகளை அவரின் எடிட்டிங்கிற்குப் பிறகே வெளியிடுவேன்.

**கவிதை மற்றும் வாழ்க்கை ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என நீங்கள் நினைக்கிறீர்களா?**



கட்டாயம் உண்டு. அன்றாடங்களின் பாதிப்புகளைக் கவிதையாக்கிக் கொண்டுதானே இருக்கிறோம். வாழ்க்கை கவிதையால் நிரம்பியது. கவிதை வாழ்வில் நிரம்பியது.

**சமகாலச் சமூகத்தையும் அரசியலையும் கவிதை மூலம் நீங்கள் எப்படி பிரதிபலிக்கிறீர்கள்?**

சமகாலச் சமூகம் பேராசை கொண்ட சமூகமாக உள்ளது. எதிலும் நிதானமற்ற போக்குதான். மனிதனுக்காக மட்டுமே இச்சமூகம் உள்ளதாக நினைக்கிறார்கள். உடன் வாழும் உயிரிகள் குறித்து நீர்நிலைகள், காடுகள் குறித்துக் கிஞ்சித்தும் அக்கறையற்ற போக்கு கவலையளிப்பதாக உள்ளது. நம் கவலைகள் கவிதைகளில் வெளிப்படத்தானே செய்யும்.

அரசியல் சொல்லவே வேண்டாம். சமையலறை வரை வந்துள்ளது. எதை உண்ணவேண்டும் எனத் தீர்மானிப்பதுவரை தலையீடு உள்ளது. படைப்பாளிகள் ஏதேனும் ஒருவிதத்தில் தங்கள் படைப்புகளில் அதைச் சுட்டிக் காட்டிக்கொண்டுதான் உள்ளார்கள். அதிலும் கவிதைகள் உடனடியாக எதிர்வினையாற்றுகின்றன. நானும் எனது கவிதைகளிலும் கட்டுரையிலும்

சுட்டிக்காட்டவே செய்கிறேன். என் கவிதை ஒன்றையும் பகிர்கிறேன்.

**அரவம்**

நஞ்சாலான உடலைக் கொண்டு
உலகை வலம் வரும்
அரசதிகாரத்தின்
காடுகளில் அலையும்
ஆதி மனிதனின்
சிரிப்பொலியில் அதிர்கிறது
வனம்.

என் நிலம்
கடும் விஷங்களை
முறிக்கும் செடிகளைக் கொண்டது

**கவிதை சமுதாய மாற்றத்திற்கு உதவுமா?**

உதவும் என்றே நம்புகிறேன். அது சட்டெனத் தெரியாது. மெல்ல நிகழும். கவிதைகள் குற்ற உணர்வை ஏற்படுத்தக் கூடியன. அக்குற்ற உணர்வே மாற்றங்களுக்கான வேராக இருக்கும்.

**தமிழ்க் கவிதையின் தற்போதைய நிலை குறித்த உங்கள் பார்வை என்ன?**

தமிழ்க் கவிதைகள் தொடர்ந்து மாற்றங்களுக்கு உட்பட்டு வருகின்றன. பாடுபொருள்களின் தேர்வு வியப்பூட்டுவதாக உள்ளன. இருண்மையோடு எழுதியவர்கள் கூட தற்போது எளிமையாக எழுதுகிறார்கள். இணையப் பெருக்கத்தால் நிறைய புதியவர்களின் கவிதைகளை வாசிக்க முடிகிறது. நம்பிக்கையானவர்கள் நிறைய வந்துகொண்டு உள்ளார்கள்.

முன்னத்தி ஏர்களாக இருக்கும் ஆளுமைகளின் மீது எனக்கு வருத்தமும் உண்டு. புதியவர்களின் நூல்களை வாசித்து நிறை குறைகளை அக்கறையோடு சுட்டிக்காட்டுவதில் பெரிய சுணக்கம் உள்ளது. எதைக் கூறினாலும் பொத்தாம் பொதுவாகவே கூறுகிறார்கள். இலக்கியத்திலும் சாதிக்காரன் ஊர்க்காரன் எனும் பாசங்கள் ததும்பி ஓடத்தான் செய்கின்றன. பாகுபாடுகள்



நிறைந்த சமூகத்தில்தானே வாழ்கிறோம். அது இங்கேயும் பிரதிபலிக்கவே செய்யும் என மனதைத் தேற்றி, தொடர்ந்து நம் விருப்பத்தின் பொருட்டு இயங்கவேண்டி இருக்கிறது.

**உங்கள் வாழ்க்கையின் முக்கியமான தருணங்கள் எவை, அவை உங்கள் கவிதைகளில் எவ்வாறு பிரதிபலிக்கின்றன?**

பிழைப்புக்கான இடப்பெயர்வு, அப்பா, அம்மா இறப்பு, கொரானா பாதிப்பு என எதையாவது சொல்லலாம். எல்லாவற்றையும் மீறி தினசரி வாழ்வதே முக்கியமானதாக இருக்கிறது. அது என் கவிதைகளிலும் வெளிப்பட்டபடியே உள்ளது.

**உங்கள் பயணம் ஆரம்பிக்கும்போது சந்தித்த சவால்கள் என்ன?**

எழுத்துப் பயணம் எனக் கொள்கிறேன். எதை எழுதுவது, எழுதுவதெல்லாம் கவிதையா, பத்திரிக்கைகளுக்கு எப்படி அனுப்புவது, கவிதை முடிந்த பின்னும் படிப்பவர்களுக்குப் புரியாமல் போய்விடுமோவென மேலும் நீட்டித்து எழுதுவது குறித்த குழப்பம், இது கவிதையாக வரவில்லை, இது நல்ல கவிதை என எதைவைத்து எப்படி சொல்கிறார்கள் என நிறைய்ய குழப்பங்களைக் கண்ட தொடர் பயணிப்பே இன்னும் இயக்குகிறது.

**ஒரு கவிஞராக உங்கள் இலக்கு என்ன?**

சாகித்ய அகாதமி விருது வாங்கிடணும். அதைக் கொண்டு கனவு இல்லத்தில் குடியேறிடணும். பெரிதினும் பெரிது கேள் என்பதற்கேற்ப பெரியதாகவே ஆசைப்படுவோமே.

**கவிதை எழுதுவது, கட்டுரை எழுதுவது இண்டிலும் நீங்கள் உணர்வது / வேறுபடுவது பற்றி?**

கவிதை நமக்கான முயற்சி. ஒன்றில் விட்டாலும் இன்னொன்றில் பிடித்திடலாம். கட்டுரை அப்படியல்ல. சமகாலத்தில் இயங்கிக்கொண்டிருப்பவர்களின் நூல்கள் குறித்து எழுதுவதால் நிதானத்தோடும், பொறுப்புணர்வோடும் செய்ய வேண்டி இருக்கிறது. பாகுபாடற்று என் புரிதலுக்கேற்ப, போதாமைகளோடும் கட்டுரைகளை எழுதிக்கொண்டிருக்கிறேன்.

**நாவல் / சிறுகதை எழுதும் எண்ணம் இருக்கிறதா?**

கவிதையிலே தொடர்ந்து புழங்குவதால் கதை எழுதினால் கூட கொஞ்சமாகவே எழுத முடிகிறது. அதனால் குறுங்கதைகள் எழுதிக்கொண்டிருக்கிறேன். பால்யகால வாழ்வை நாவலாக எழுதும் ஆசை உண்டு. கட்டாயம் எழுதுவேன்.

**நீங்கள் பரிந்துரைக்கும் புத்தகங்கள்.. புனைவு அபுனைவு இரண்டிலும்.**

இது தப்பித்தலுக்கான பதில் அல்ல. பரிந்துரை செய்வதில் உடன்பாடில்லை. அவரவர் வாசிப்பு அவரவர்களுக்கான ரசனையை உருவாக்கும். அதற்கேற்றாற்போல் ஒரு தேடல் உருவாகி அது சார்ந்த நூல்களை அவரவர்களே கண்டடைவார்கள். எழுதப்பட்ட, எழுதப்படும் நூல்கள் அனைத்தும் அதற்கான சலனத்தை உருவாக்கவே செய்யும். ரசனையும் எதிர்பார்ப்பும் மாறிக்கொண்டிருப்பது. ■

# கடைசி மனிதன்




மணல் தொடும் நுரைகளுக்குக் கொஞ்சம் உணர்வைத் தூண்டியது பின்வரும் அலை. அந்த அலையில் பூத்துப் பூத்து வெடித்தன நுரைகள். அப்படித்தான் ஏஞ்சலா தன் உதிரத்தைக் கடலில் கலப்பதுபோல உதிர்த்தாள். வயது பதினெட்டைத் தாண்டியது. யாருமற்ற இந்த உலகில் பெருத்த எதிர்பார்ப்புகளோடு எந்தச் சடங்குகளையும் எந்தத் திட்டங்களையும் செய்ய வேண்டிய ஏமாற்றம் இல்லை அவளிடத்தில். இயற்கை தன் வேலையைச் செய்தது. உதிரம் சில நாட்களுக்குத் தொடர்ந்து, அதுவாகவே நிறுத்திக்கொண்டது.

வீட்டைவிட்டு அடிக்கடி அவள் கடலுக்குச் சென்று விளையாடுவாள். கடல் அருகில் அவள் வீடு. யாருமற்ற பொழுதை எப்படிக் கழிப்பது? கடலலைதான் அவளுக்கு எல்லாமும். அலையோடு பேசுவாள். தன் காலடித் தடங்களை ரசிப்பாள். இந்த உலகத்தில் செயற்கைத்தனங்கள் அனைத்தும் அழிந்துபோயிருந்தன, ஒரு சிலவற்றைத் தவிர.

தனக்கான உணவிற்காக மரங்களிலிருந்து கொஞ்சம் பழங்கள் மற்றும் மீன்களைச் சுட்டுச் சாப்பிடுவாள். கடைசித் தீப்பெட்டி முடியும் தறுவாயில் நிரந்தரமாகக் கட்டைகளை அடுக்கிக் கொஞ்சம் தீயை மூட்டிவைத்தாள். அவள் வீட்டில் எப்பொழுதும் கனந்து கொண்டேயிருந்தது தீ. கடல் முழுவதும் ரசாயனக் கலவைகள், பூமியின் தோல்கள் முழுவதும் ரசாயன வாசனை. அதில் பல குணங்கள் அடங்கிக் கிடக்கின்றன. முதல் மனிதன் எப்படி வந்தானோ அப்படி கடைசி மனிதர்களைப் பெற்றுவிட்டது பூமி.

அன்று விளையாடிக்கொண்டிருக்கும்போது தனித்த கப்பல் ஒன்று தென்பட்டது. அவள் அந்தக் கப்பலையே பார்த்துக்கொண்டிருந்தாள். அலையில் குளித்து முடித்த ஈரத்தோடு அமர்ந்திருந்தாள். அவள் அமர்ந்திருந்த இடத்தில் அலை அப்படியே அவளை உள்ளிழுத்துச் சென்றது. அலை சில நேரம் அவளிடம் விளையாடும். ஏஞ்சலா சற்றுத் தடுமாறி எழுந்தாள். கரையில் அமர்ந்து அப்படியே அந்தக் கப்பலையே பார்த்து அமர்ந்திருந்தாள். அவளுக்கு ஆர்வம்.

எப்படியாவது அந்தக் கப்பலில் மனிதர்கள் இருந்தால் அதிலேறி அவர்களோடு சென்றுவிடலாம் என்று நினைத்தாள். அந்தக் கப்பல் தூரத்தில் அப்படியே நின்றிருந்தது. தன் பயணங்களை முடித்துக்கொண்டு போதும்


என்கிற அளவிற்குக் களைத்துப்போயிருந்தது அதன் உருவத்தில் தெரிந்தது. அவ்வளவு பழையது அந்தக் கப்பல். அந்தக் கப்பலில் உள்ள நங்கூரம் அறுந்து போய்விட்டதால் அங்குமிங்கும் அலைமோதிக் கிடந்தது.

அது கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து ஏஞ்சாலாவின் அருகில் கரையைத் தேடி வருவது தெரிந்தது. ஏஞ்சலாவிற்கு ஆர்வம் அதிகமானது. கப்பல் கரையைத் தட்டி அமைதியாக மணலில் நின்றது. தனித்திருந்த ஏஞ்சலாவிற்கு அதற்குமேல் ஆர்வம் தாங்க முடியவில்லை. தன் மொழியை மறந்திருந்தாள். அடிக்கடி அதைப் பேசியும் எழுதியும் கடல் மணலும் அலையும்தான் உயிர்ப்போடு வைத்திருந்தது அவள் மொழியை.

நீண்ட நாட்களுக்குப் பிறகு சப்தமாக முதல் குரலை எழுப்பினாள். “யாராவது இருக்கிறீர்களா?” என்று. எந்த வித மறு பதிலும் வரவில்லை. அந்தக் கப்பலின் கைப்பிடியைப் பிடித்து ஏறினாள். அது உப்புக் காற்றும் உப்பு நீரும் அளவிற்கு அதிகமாகப் பட்டு சில ஆண்டுகள் பயணத்தில் துருப்பிடித்து உதிர்ந்திருந்தது. அதன்மேல் அவள் பிடித்து ஏறவும் அது உடைத்துக்கொண்டு அலையில் வீழ்ந்தாள். மீண்டும் ஈர உடல்.

மீண்டும் கப்பலில் தட்டுத் தடுமாறி ஏறினாள். உள்ளே சுற்றிப் பார்த்தாள். நிறைய எலும்புக்கூடுகள் கிடந்தன. அவர்கள் அருகில் கிடந்த உடைகளை எடுத்துத் தன் திறந்த மார்பில், கிழிந்து தொங்கிய பழைய உடையை மறைத்தாள்.

மேல்தளத்திற்குச் சென்று கத்தினாள். “யாராவது இருக்கிறீர்களா?” அவள் கடைசி நம்பிக்கையும் போய்விட்டது. தார்ப்பாய்க் குவியல் மட்டும் மட்காமல் இருந்தது. அதனுள்



ஒரு சலசலப்பு கேட்டது. பயத்தோடு சென்று பாலித்தின் தார்ப்பாயை விலக்கினாள். அதனுள் நாற்பது வயதுள்ள ஒருவன் படுத்துக் கிடந்தான். அவன் பைத்தியக்காரத்தனமாக உளறினான். அவன் சொற்கள் முழுமையாக ஏதுவும் புரியவில்லை இவளுக்கு. அரை மயக்கமாக இருந்தான். அவனுக்குப் பயம் இவளைப் பார்த்ததும். ஏஞ்சலா அவனை மெல்லத் தூக்கி எழுப்பி, கப்பலை விட்டு மெல்லக் கரைக்கு அழைத்து வந்தாள்.

கரையில் சிறிது நேரம் இருவரும் அமர்ந்தார்கள். அவனுக்குப் பசி. கடல் பயணத்தில் கப்பலில் கிடைக்கும் மீன்களைக் கொஞ்சம் பச்சையாகச் சாப்பிட்டு உயிர் பிழைத்தான். இதற்குமுன் கப்பலில் இருந்த உணவுப்பொருட்களைப் பச்சையாகச் சாப்பிட்டுப் பீப்பாய்களிலிருந்த நீரைக்

குடித்து உயிர் பிழைத்துக்கொண்டதையும் சில மாதங்களாக உணவு இல்லை என்பதையும் அவளிடம் சொன்னான். வழக்கமாகக் கரையொதுங்கும் சில மீன்களைப் பிடித்துக்கொண்டு அவள் அவனை வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். அங்கு அடுப்பில் நெருப்புத் தணல் தகதகவென்று இருந்தது. கொஞ்சம் பழங்களையும் சுட்ட மீன்களையும் அவனுக்குப் பரிமாறித் தானும் சாப்பிட்டாள். அருகில் பழைய கிணற்றில் தண்ணீர் எடுத்தாள். இருவரும் அருந்தினார்கள்.

சற்று மயக்கம் தெளிந்த அவன், “என் தீவில் ஏற்பட்ட மிகப்பெரிய பேரழிவில் கடல் நீர், காற்று, மழை என ஒருசேர சூழ்ந்து எங்கள் தீவையே அழித்துவிட்டது. அதிலிருந்து தப்பிக்க அந்தத் தீவின் வழியாக வந்த கப்பலில் ஏறினேன். என்னுடைய தீவில் யாருமே பிழைத்திருக்கமாட்டார்கள் என நினைக்கிறேன். நான் கப்பலில் ஏறி எங்கள் தீவைத் திரும்பிப் பார்க்கும்பொழுது தீவு முழுவதும் நீரில் மூழ்கிப்போயிருந்தது. அதே நிலை கப்பலுக்கும் ஏற்பட்டிருக்கும் என நினைக்கிறேன்.

கப்பல் முழுவதும் சடலங்களோடு பெரும் சுழற்சியில் அடிபட்டு மாலுமிகள் இல்லாமல் கப்பல் வந்து கொண்டிருப்பதை உணர்ந்தேன். நான் தைரியத்தோடு கப்பலில் ஏறினேன். கப்பல் சென்ற திசையெல்லாம் சில கண்டங்கள் நீரில் மூழ்கிப்போயிருப்பதைப் பார்த்தேன். எரிபொருள் தீர்ந்துவிட்டது.

என்னால் எதுவுமே செய்யமுடியவில்லை. அப்படியே கப்பலை அதன்போக்கில் விட்டுவிட்டேன். எவ்வளவோ சடலங்களைக் கடலில் தூக்கி வீசினேன். அப்படித் தூக்கி வீசும் சடலங்களைச் சாப்பிட மீன்கள் போட்டிப் போட்டுக்கொண்டு வரும். அதில்சில கப்பல்மேல் வீழ்ந்து கிடக்கும். அதைக் கத்தியால் கீறி சில நாட்களுக்குச் சாப்பிடுவேன். இப்படியே சென்ற நாட்களில் சில சடலங்களை எனக்குத் துணைக்கு வைத்துக்கொண்டேன்” என்றான்.

சிறிது நேரம் அமைதியாக இருந்துவிட்டு, “இந்த இடத்திற்குக் கரையொதுங்கி உன்னைப் பார்ப்பேன் என்று துளியளவும் நம்பிக்கை எனக்கு இல்லாமல் இருந்தது” என முடித்தான்.

“ஏறக்குறைய அதே நாள்தான் என்று நினைக்கிறேன். பெருத்த வெப்பக் காற்றோடு மணலும் நீரும் சூழ்ந்தது. எங்குப் பார்த்தாலும் பிணக்குவியல். அப்பொழுது எனக்கு வயது பதினைந்து. அன்று கூட இந்தக் கடலில்தான் விளையாடிக்கொண்டிருந்தேன். மணல் குவியல்மேல் தூக்கி வீசிவிட்டது என்னை இந்தக் கடல். குவியலிலிருந்து தடுமாறி நீண்ட நேரச் சரிவிற்குப் பிறகு என் பெற்றோர்களை எங்குத் தேடியும் காணவில்லை. காற்றும் மணலும் அனைவரையும் தூக்கி வீசி குவியல் குவியலாகக் கொன்று குவித்திருந்தது.”

கண்களுக்கு எட்டிய தூரத்தில் இருந்த மணல் மேடுகளைக் காண்பித்தாள். அவை பிரமிடு போன்ற அளவிற்குப் பிரமிப்பாகக் காட்சி தந்தன. ஆங்காங்கே திட்டுத் திட்டாக அந்தக் குவியல்கள்.

“சில ஆண்டுகளாகத் தனிமையான வாழ்க்கை. எவ்வளவோ தூரம் இந்த மணல் குவியல்களுக்கு இடையில் நடந்து தேடினேன். எவ்வளவு தூரம் நடந்தும் ஒருவர்கூட தென்படவில்லை என் கண்களுக்கு. அப்பொழுதே இந்த உலகம் அழிந்துவிட்டது என முடிவு செய்துவிட்டேன்” என்றாள்.

“ஆமாம்... உன் பெயர் என்ன” என்றாள்.

“என் பெயர் ஆதவன்” என்றான்.



இருவரும் அருகில் அமர்ந்தார்கள். ஏதோ பரிமாறிக்கொள்ளவேண்டும்போல் இருந்தது இருவருக்கும். “முதலில் காதல் பிறந்ததா, காமம் பிறந்ததா” என்று ஏஞ்சலா கேட்டாள். அவள் உதடு ஆப்பிள்களாக மாறியது. ஆப்பிளைக் கடித்தான் ஆதவன்.

“ம்...” என்று முனகிச் சாய்ந்தாள். அது அவளுக்கு வேண்டும் வேண்டும் என்றிருந்தது.

ஆதவன், ஏஞ்சலாவின் முதுகின்மீது ஏறி கடற்கரைக்குப் போனான். அவர்கள் உடுத்தியிருந்த அழுக்காய்ப் போன அடையாளங்கள் மிகுந்த பழைய உடைகளைக் கழற்றி எறிந்தார்கள். ஏஞ்சலாவின் நிர்வாணம் ஆதவனுக்குக் கதிர்களைத் தூண்டிப் பிரகாசிக்கச் செய்தது. ஆயிரம் ஒளி பொருந்திய கண்களோடு இருவரும் தங்கள் உடலைப் பொருத்திக் களித்தார்கள். அன்று முதல் அலைகள் ஓயவே இல்லை. அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை, இந்த உலகத்தில் எதை ஸ்தாபிப்பது என.

அவள் தீ மூட்டிய நெருப்பு கனிந்துகொண்டேயிருந்தது. எப்பொழுதும் ஈருடலாய்ப் பின்னிப் பிணைந்தே கிடந்தார்கள். கடல் அளவு காதல் வளர்ந்தது. காமம் அதில் அலை அளவு நிற்காமல் இருந்தது.

இப்படியே ஐந்து வருடம் கழிந்தது. ஏஞ்சலா மணல்மீது படுத்துக்கொண்டு ஆதவனைப் பார்த்துக் கேட்டாள். “இந்த ஐந்தாண்டுகளில் பல முறை உறவு வைத்துக் கொண்டாடினோம். இன்னும் வயிற்றில் ஏதும் இல்லையே” என உதட்டைக் கடித்தாள். “இங்கு மனிதர்கள் இருந்திருந்தால் இந்தக் கேள்வியைக் கேட்டே நம்மை உயிரோடு கொன்று இருப்பார்கள். அவர்கள் இல்லாத உலகம் எவ்வளவோ பிரச்சனைகளைத்

துறந்து கிடக்கிறது” என்றாள்.

“ஆம்” என்று முனகியவாறே “இந்த முறை நிச்சயம்” என்ற உணர்வோடு அவளைக் கூடிக் களித்தான் ஆதவன்.

இப்படியே இன்னும் ஐந்தாண்டு சென்றது. அவள் கர்ப்பம் தரிக்கவேயில்லை. அதே அழகு சிலை ஏஞ்சலாகவே இருந்தாள்.

ஆதவனும் பிரகாசமான ஒளியோடு இருந்தான். ஆதவனும் ஏஞ்சலாவும் ஒரு முடிவுக்கு வந்தார்கள். எப்படியாவது இந்த உலகத்தை மீண்டும் மனிதர்கள் வாழும் இடமாக உருவாக்க வேண்டும் என்று. கடல் மணலில் கடவுள் சிற்பங்கள் சிலவற்றைச் செய்து வழிபட்டார்கள். அவை நீண்ட நாட்களுக்குச் சரியான வடிவங்களைப் பெற்று நிலைத்திருக்க முடியவில்லை.

ஏன் உலகத்தின் கடைசி மனிதராக நாம் இருந்துவிடக்கூடாது என முடிவெடுத்து வாழத் தொடங்கினார்கள். முன்பை விட தினக் கொண்டாட்டம், ஆடல் பாடல் என ஆடிக் களித்தார்கள். கடல் இசைத்துக்கொண்டே இருந்தது. சில ஆண்டுகளில் ஏஞ்சலா சற்று வயதான தோற்றத்தில் அந்த மணல் ஆட்டத்தில் ஆவேசமாக ஆடினாள். காமம் காணாமல் போயிருந்தது அவள் உடலில். அதே இரவு, அதே இருவர் நிலையில் அவள் கடல் மணல்மேல் இறந்து போனாள்.

ஆதவனுக்குத் தன் காதலியை இழந்துவிட்டது உச்ச வேதனையை தந்தது. அவள் தொலைந்து தூரம் போய்விடவே அழுது தீர்த்தான். அவள் உதடுகளில் முத்தம் பதித்தான். அவள் நினைவுகளோடு நெடிய அஞ்சலியைச் செலுத்தினான். கடல் மணலை வாரி இறைத்தான். அவளை, அவள் விரும்பும் அதே கடல் மணலில் புதைத்தான். ஆதவன் தனித்து நின்று வானம் பார்த்து, “ஏஞ்சலா” எனக் கத்திக்கொண்டே இறுதியாக மணலைத் தள்ளி மூடினான்.

அந்தக் கணத்தில் படுக்கையை விட்டுத் திடீரென்று எழுந்தாள் ஏஞ்சலா. சுற்றிலும் பார்த்தாள். வீட்டில் விளக்குகள் மங்கலாக எரிந்தன. அருகில் அவள் கணவன் படுத்திருந்தான்.

‘நாளை கருத்தரிப்பு மையத்திற்குச் செல்ல வேண்டும்’ என்று சிந்தனையில் இருந்தாள். “பெண், இந்தச் சமூகம் மற்றும் உளவியல் சிக்கலைச் சமாளிக்கவே தன்னை தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டிய கொடுமையான காலம் இது. இல்லை இல்லை இதுதான் பரிணாம வளர்ச்சியா” என்று மனதில் முணுமுணுத்தாள்.

இந்த முறையாவது குழந்தை வந்துவிடும் என்ற ஆசையோடு விழித்துப் பார்த்தாள். அந்தக் கருத்தரிப்பு மையத்தை விட்டுவிட்டு வேறு ஒரு கருத்தரிப்பு மையத்திற்குச் செல்லலாமா என்று யோசித்தவாறே ஆதவனை நினைத்தாள். ஜன்னல் வழியாக இந்த முறை அவளைச் சந்திரன் பார்த்தான். சந்திரன் அவளுக்குக் ‘கரு இந்தமுறை உறுதி’ என்று சொல்வதாக நினைத்தாள்.

தெருவெங்கும் கருத்தரிப்பு மையங்கள் இருந்தன. மக்கள் தொகை குறைந்துகொண்டே வந்தது. ஏஞ்சலா திடீர் என்று ஆழ்ந்த உறக்கத்திற்குச் சென்றாள். அலை மணலில் அப்படியே மல்லாந்து படுத்திருந்தாள். அவள் தொடையிடுக்கில் கடல் தண்ணீர் தொட்டது. அவளுக்கு ஆதவனைப் பிடித்திருந்தது. கடைசி உலகத்திற்கும் கடைசி மனிதனிடமும் சென்றாள். ■

# டாக்டர் உன்குழாய்

கத்தரிக்காயில் போட்டோ நியூட்ரியெண்ட்ஸ் இருப்பதால் நினைவாற்றல் அதிகரிக்கும் என்று உன்குழாய் (Youtube) சேனலில், கைவைத்தியர் சொன்னது மிகவும் ஆறுதலாக இருந்தது. அதுவரை அடிக்கடி காதலியின் பெயரை மறந்துவிடும் எனக்கு, அதன்பிறகு அப்படியான துன்பியல் சம்பவங்கள், அவளின் திருமணம் வரைக்கும் நடைபெறவில்லை.

இத்தனைக்கும் தன் பெயரினை அப்பாவின் பெயரோடு சேர்த்தே சொல்லியிருந்தாள். நானும் அவர் பெயரை நீக்கிவிட்டு என் பெயரைச் சேர்த்துப் பலமுறை உச்சரித்துப் பார்த்திருக்கிறேன். அத்தனை அழகாக இருக்கும். அந்நேரங்களில் கோயில் மணி அடிக்கும் மனதுக்குள் ஆயிரம் நாதஸ்வரங்களின் ஓசை கேட்கும். அப்படியிருந்தும் அவளின் பெயரை நான் மறந்துவிடுவது துரதிர்ஷ்டமானது.


ஒரு வாரம் கத்தரிக்கா சாப்பிட முடியாமல் போன காலத்தில், அவளின் ஞாபகம் இல்லாமல் போய்விட்டது. என் நல்ல நேரம்.. அதுவொரு குற்றமென்று நினைத்து, வேறு திருமணம் செய்துகொண்டு போய்விட்டாள்.

நானும் ஞாபக மறதியில் அந்தத் திருமணத்திற்குச் சென்று பிரியாணி சாப்பிட்டு வந்தேன். ஞாபகம் இருந்திருந்தால் நீள சால்வை அணிந்து இதயக்கோவில் சினிமாப் பாடலைப் பாடிவிட்டு வந்திருப்பேன்.

இப்போது பிரச்சனை அதுவல்ல. என்ன சாப்பிட வேண்டும் என்ன சாப்பிடக்கூடாது என்று உன்குழாய் (Youtube) சேனல்களின் டாக்டர்களின் அக்கப்போர் பற்றிப் பேசுவோம். சேனல்கள் அதிகரிக்கப்பட்ட பிறகு, பெரும்பாலான டாக்டர்கள் அதில் வர, நம் மக்களும் 'பிரபா ஒயின்ஸ் டாக்டருங்களா? எப்ப டாக்டர் ஷட்டரை ஒப்பன் பண்ணுவீங்க?'ன்னு சப்ஸ்கிரைப்பர்களாகி ஷட்டரைத் தட்ட, அவர்களும் வாழைப்பழத்தை எப்போது சாப்பிடலாம்? அதாவது சாப்பாட்டிற்கு முன்னரா? சாப்பாட்டிற்குப் பின்னரா? என்று வாழைப்பழம் வரைக்கும் இறங்கி வந்துவிட்டார்கள்.

அதுவரையிலும், உத்துப் பார்த்தாலே உரிந்துகொள்ளும் வாழைப்பழத் தோல்.. இப்போது கடினமானது. ஒருமுறை 'உணவே மருந்து நிகழ்வில்' ஒரு டாக்டர், 'கருப்புத் தயிர்' மணிக்கு ஒருமுறை என, மூன்று தொண்டை மண்டலம், சாப்பிட்டுவர மூலம்/ பித்தம்/கபம் சரியாகும் என்றார். கூடவே செய்முறை வேறு.

டாக்டர் சொன்ன கருப்புத் தயிர் செய்முறையினைக் குறிப்பெடுத்து வைத்ததை அப்படியே தருகிறேன்... கருஞ்சீரகம், கருப்பு எள், கருப்பு கடுகு, கருப்பு உளுந்து இதெல்லாம் ஒரு கரண்டி, கருப்பு எருமை மாட்டுப் பால் ஒரு லிட்டர், கருப்புக் கடாய், கருப்புக் கரண்டி, கருப்பு ஸ்டவ் இதையெல்லாம், காலையில் வெறும் வயிற்றில் சூரியன் உதிக்கும் முன்பாகத் தயார் செய்து, மதியம்



உச்சி வெயிலில் மாடியில் வைத்துவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வந்துவிட வேண்டும். மாலை ஆறு மணிக்கு மேல் சூரியன் மறைந்ததும் போய்ப் பார்த்தால், கருப்புத் தயிர் ரெடியாக இருக்குமாம்.

காலையில் பழைய சோறு சாப்பிட்டால் அல்சர் குணமாகும் என்றொரு அணியும், உடல் பருமனாகும் என்றொரு அணியுமாக வாத, பிரதிவாதங்கள் சொல்ல, இரண்டு தரப்பு சேனல்களையும் பார்த்ததில் தானாகவே எனக்கு உடல் எடையும் அல்சரும் குறைய ஆரம்பித்திருந்தன.

இதென்ன பிரமாதம், புரோட்டின் வார் குரூப் பற்றித் தெரியுமா? மூன்றாம் உலக அக்கப்போர், இந்தப் புரோட்டீன் குறைபாடுகளுக்கு இருக்கும் என்றதும், பயந்து அத்தனை குழுக்களையும் பின்தொடர்ந்தேன். இறுதியில் பாதாம் பருப்பைத் தண்ணியில் ஊற வைக்க வேண்டுமா, வேண்டாமா? என்பதில் ஆரம்பித்து, முந்திரிப் பருப்பை அப்படியே சாப்பிடுவதா அல்லது வறுத்துச் சாப்பிடுவதா? என்று தனியே ஒரு குரூப் வறுத்தெடுத்தார்கள். அதைவிடவும் புரோட்டினைப் பவுடராக்கிப் பத்தாயிரம் அட்வான்ஸ் வாங்கி, அதைத் திருப்பிக் கேட்டதும், அதுக்கும் ஒருகிலோ பவுடரை அனுப்பி வைத்த குழுவை இப்போது பார்த்தாலும் ஏடிஎம் கார்டு மேல இருக்கிற பதினாறு நம்பர் சொல்லு குரூப் மாதிரியே தெரியும் எனக்கு.

இத்தனை பேசியாகிவிட்டது, பேலியோ டயட் பற்றி பேசவில்லையென்றால் இந்தக் கட்டை வேகாது. காலையில் வெறும் வயிற்றில் சுமதியை சாரி சுமிதியைக் குடிக்க வேண்டும், பத்து கிலோமீட்டர் நடை, இதில் மட்டும் கவனமாக இருக்க வேண்டும், கண் மண் தெரியாமல் கடல் பக்கம் நடக்க இலங்கை நாட்டிற்குச் சென்றுவிடும் ஆபத்து நேரலாம். பத்துமணிக்கும் சுண்டல், பயிறு மட்டும். பதினோரு மணிக்குப் பழக்கூட்டு




அதாவது ப்ரூட் சாலட், மதியம் கொஞ்சம் சாதம் நிறைய காய்கறி. சாயங்காலம் நாலு மணிக்கு வெள்ளரி, கொய்யாக்காய், கேரட்டின் சில பல துண்டுகள். இரவு சுண்டக்காய்ச்சிய பால், பாதாம், பிஸ்தா, முந்திரி என முதலிரவுக்கான எல்லாமும் சொன்னார்கள். இதற்கு நடுவில் வேலைக்கு எப்படிப் போக என்றதும், உடலே ஆயுதம், மற்றதெல்லாம் சும்மா என்றார்கள். அதை வேத வாக்காக எடுத்து, போன வாரமே வேலையை விட்டுவிட்டேன்.

ஒருநாள் மதியம் நடுச் சூரியன் நேரத்தில், எனக்குப் பிடித்த பிரியாணியின் வாசம் வந்துபோக, பயிற்சியாளரிடம் கெஞ்சிக் கேட்டேன். அவரும் என்மீது பாவப்பட்டு, அடுத்த மாசம் ‘சூரியன் உதயமானதிலிருந்து, அஸ்தமிக்கும் வரையிலும் எது வேண்டுமானாலும் சாப்பிடலாம்’ என்றொரு திட்டம் உள்ளது, அதில் பார்த்துக்கொள்ளலாம் என்றார். அதையும் நம்பிவிட்டேன். இந்த டயட் முறையால் எனக்குக் கிடைத்த உடனடி நன்மைகள் பற்றியும் உங்களிடம் சொல்ல வேண்டும். நரைமுடி எல்லாமே கருப்பாகிவிட்டது, நகங்களின் வளர்ச்சி மட்டுப்பட்டிருக்கிறது. காதடைத்த மாதிரியே இருப்பதால் மனைவி எத்தனை திட்டினாலும் காதில் விழுவதில்லை.

இதற்கிடையில் காதல் ஆசை வந்து போக, இப்போதெல்லாம் உணவில் கத்திரிக்காய் நிறைய எடுத்துக் கொள்கிறேன். யாருக்காவது என்னைக் காதலிக்கும் எண்ணம் இருந்தால் தயவுசெய்து முகநூலின் உள்டப்பிக்கு வரவும். இனி எப்போதும் உங்களின் பெயரை மறந்துவிடாமல் காதல் செய்வேன். இது என் சின்ன மாமியார் மங்கம்மா மேல சத்தியம்.

■

கவிஜி




# கடலாகும் ஒரு துளி

**திரைப்படம் : Samsara**

ஒரு துளியாக விழுந்து ஒரு பெருங்கடலைத் தூர் வாரிக்கொண்ட புத்தன் பற்றிய படம்.

போதி கண்ட புத்தனைக் கொண்டாடுகிறோம். புத்தனை மன்னித்த யசோதரையை நினைவிலாவது வைத்திருக்கிறோமா.. ஒவ்வொரு புத்தனுக்குப் பின்னும் ஒரு யசோதரை இருக்கிறாள். பாதியில் நின்றுவிட்ட அவளின் யாத்திரைக்கு எந்தப் புத்தனிடமும் பதில் இல்லை.

இரண்டு ஆடுகள் அண்ணாந்து பார்த்து நிற்க... இடையே வானத்தில் பறந்துகொண்டிருக்கும் கழுகு இப்படி முதல் காட்சியிலேயே மனதுக்குள் மந்திரம் ஓதும் இந்தப் படம்... அடுத்தடுத்த திறவுகளை இதயத்தில் நிகழ்த்துகிறது. அதன் கால்களில் இருந்து விழும் கல்... ஆட்டின் தலையில் விழும் அந்த நொடி நெற்றி நிறைய சிந்தனை விரிய ஆரம்பிக்கிறது நமக்கு. இணுங்கித் திரியும் காலத்தின் கையில் அகப்படவும் இல்லை, அகப்பட்டதும் இல்லை என்பதாக ஒரு வாழ்வு. தனக்குள்ளே தன்னைச் சுருட்டிக்கொள்ளும் உள் நோக்கிய பயணத்தில் உள்ளே இருக்கும் வெளி பயங்கரமானது.

உறவுக்கும் துறவுக்கும் இடையே பிட்சுகளின் வாழ்க்கை ஓர் இறகைப் போல அசைந்துகொண்டே இருக்கிறது. கழுகு பறத்தல் ஒரு தொடர்ச்சி. அதன் காலில் இருந்த கல் விழுந்தது ஒரு தொடர்ச்சி. மேய்ந்துகொண்டிருந்த ஆடு செத்தது ஒரு தொடர்ச்சி. சேர்ந்து காட்டும் காலத்தில் எதுதான் முடிவு? மரணமா.. இந்த வாழ்வின் மயக்கமா..

சிவப்பு அங்கியும் மொட்டைத் தலையும் துறவறத்தின் குறியீடு என்றால்... அவர்களுக்கும் தோன்றும் பசி எதற்கான



உரை? மரணத்துக்கும் துக்கத்துக்கும் இடையே இந்த உடலின் பொருள்தான் என்ன? உள்ளத்தின் திறவுகோல்தான் எது?

மலை உச்சி. பரந்த வெளிகளும் மன உச்சிப் பள்ளத்தாக்குகளும் கொண்ட பெரும் வழி... புத்த பிட்சுகளின் பயணம். பின்னால் ஒலிக்கும் மேல் நோக்கி எழும் பீப்பி இசையில் இதயத்தின் சுத்திகரிப்பு. புல்லாங்குழல் சப்தத்தோடு தக் தக் தக் என எழும்பும் புரிபடாத தாளம். புழுதி பறக்கும் காற்றுத் திசைக்கு இதயத் துடிப்பா.. மனமற்று இருக்க மதி என்ன செய்யும்? உழைப்புக்கு மறுப்பு என்றபோது சோற்றுக்கு வழி என்ன? பிச்சைப் பாத்திரமும் இச்சையில் சேருமென்று வெறும் கையாய் நீளும் பசிக்காவது முடிவுண்டா?

இலக்கல்ல, இலக்கை நோக்கிய பயணமே வாழ்க்கை என்ற புத்த தத்துவம் காட்சிக்குக் காட்சி உள்ளே சுழலுவதை உணர முடிகிறது. மலைப் பிரதேசமும் அதனூடாக ஓடும் நதியும் ஓவியம் நகர்த்த அங்கே வீசும் காற்றும் சுழலும் தனிமையும் சட்டமியற்றும். சாயந்திரத்தைச் சுவற்றில் மாட்டிக்கொள்ளும் மலை வீடுகளில் இரவு கூடும் நேரங்களில் சிம்னி விளக்குகளில் சித்திரம் கூட்டும்.

ஐந்து வயதிலேயே புத்த துறவியாக்கப் பயிற்சி கொடுக்கப்படுகிறான் கதையின் நாயகன்.

20 வருடங்களுக்குப் பிறகு அடுத்த கட்ட நகர்வாக மூன்றாண்டுகள் கடுந்தவம் பூண்டு அதன் பிறகு புத்த மடாலயத்துக்குக் கொண்டு செல்லப்படுகிறான். ஆனால் அவனுக்கு அந்த மடத்தில் இருக்கப் பிடிக்காமல் போகிறது. தவத்தின் வழியே கிடைக்கும் ஞானத்தின் எதிர்மறை முரணாக இங்கிருந்து கதை வேகமெடுக்கிறது. மெல்ல மெல்ல உலக ஆசைகளின் மீது ஈடுபாடு கொண்டு... காமத்தீயில் தவியாய்த் தவிக்கிறான். விடுபட முடியாத விளம்பல்கள் அவனைச் சுற்றி சம்காரம் செய்கின்றன. தவ இரவினில் அவனையும் அறியாமல் உருகிக் கரைகிறான். அதை உணர்ந்த நொடியில் குற்ற உணர்ச்சி அவனைப் பாடாய்ப் படுத்துகிறது.

தனித்து முடிவெடுக்க முடியாமல் தவிப்பதும் தகிப்புக்கு வழி என்ன என்று தெரியாமலும் ஒவ்வொரு சொப்பனமும் கிடை மனமே. தவத்துக்கும் வரத்துக்கும் இடையே நடக்கும்

மிகப் பெரிய போராட்டமாய் விரிகிறது அடுத்தடுத்த காட்சிகள்.

காலம்காலமாகத் துறவறத்துக்கும் இல்லறத்துக்கும் இடையிலான போராட்டம்... வேறு வேறு வடிவங்களில் இருந்துகொண்டேதான் இருக்கின்றன. அதன் இன்னொரு வடிவமே இந்த “சம்சாரா”.

இயக்குனர் பான் நளினின் சம்சாரா திபத்திய படம். 2001இல் வெளிவந்தது. இப்போது வரை அது கொண்ட ஒளி குறையவில்லை. அது பேசிய உண்மை கசக்கவில்லை.

உடல் போராட்டத்தின் தொடர்ச்சியாய் அவன், ஏற்கனவே தன் குருவுடனும் சக பிட்சுகளுடனும் சென்று வந்த மலைக்கிராமத்துக்குச் செல்கிறான். ஏற்கனவே சந்தித்த நாயகியின் நினைப்பு அவனை அந்தக் கிராமத்திற்கு அழைத்துச் செல்கிறது. மலைக்கிராமத்தில் போக்கிடம் இன்றித் தனித்து வயல் வரப்புகளில் கிடக்கையில் நாயகி பார்த்துவிடுகிறாள். புத்த பிட்சுவாக வந்திருந்தபோதே கண்ணும் கண்ணும் நோக்கிக் கொண்ட கணங்கள் உண்டு. ஐயயோ என்று தவிர்த்திருந்தாலும் இதோ இப்போது தன்னைத் தேடியே வந்துவிட்டிருக்கிறான். அதுவும் புத்த பிட்சுவாக அல்லாமல் சாதாரண வாலிபனாக. அவளுக்குப் புரிந்துவிடுகிறது. பதற்றப்படுகிறாள். அவனோ பற்றிக்கொள்கிறான்.

துறவறத்தை உடல் விடும் காட்சியில் நிர்வாணமாக நீருக்குள் நிற்பான் நாயகன். பிட்சுவாக இருந்த அவனுடன் எப்போதும் இருக்கும் நாய்க்கு அப்போது அவன் அந்நியனாய்ப் படுவான். உடல் மாறி உடை மாறி நிற்கும் நாயகன் எவ்வளவு சொல்லியும் நாய் கேட்காது. ஓடிவிடும். குறியீடுகளின் வழியே உடலின் குரலைப் பதிவு செய்யும் அற்புதமான காட்சி இது. மனதின் அரூபத்தன்மை படம் நெடுகிலும் உடன் வருகிறது. மானுடப் பிரமை அதன் போக்கில் கொள்ளும் இருத்தலை உள் வாங்கும் இயல்பு தொன்றுதொட்ட உடலுக்கே வாய்த்திருக்கிறது போல.

கதையின் நாயகி... தங்கத்தால் செய்த உயிராய் மின்னிக்கொண்டிருக்கிறாள். காதலும் காமமும் அவனைத் தீரா மோகத்துள்



தள்ளுகின்றன. உடன்பட்ட அவளும் அவனுடன் காட்டுக்குள் வெட்ட வெளியில் இணைகிறாள். முத்தங்களால் தொடங்கி வைக்கப்படும் காமத்தை முத்தங்களாலே முடித்தும் வைக்கிறது காதல். உடல் பட்ட இடமெல்லாம் காதல் விளைய கல்யாணமும் ஆகிறது. ஒரு ஆண் மகனும் பிறக்கிறான்.

என்னவோ குறைந்தே இருக்கிறது. தேடலின் வழியே அவன் தொடர்ந்து தொலைந்தபடியே இருப்பதை உணர்ந்தும் உணராமலும் உள்ளுக்குள் குமைகிறான். வெளியே நிகழும் இயல்பு வாழ்விலும் அவனால் உச்சம் தொட முடிவதில்லை. உள்ளூர் வியாபாரிகளின் அடாவடியைக் கேள்வி கேட்டுப் பகைத்துக்கொண்டு வெளியூர் சந்தைக்குத் தனது விளைச்சல்களைக் கொண்டு செல்கிறான். அதுதொட்டு நடக்கும் சச்சரவுகளில் தாக்கப்படுகிறான். நிலை கொள்ள இயலாத மனதோடு அவன் கேள்விகள் தொடர்கின்றன. சண்டை போடுகிறான். அடி வாங்குகிறான்.

எதையோ சமன்படுத்த அவன் உடலையே பொருளாக்குகிறான். அதன் வழியே அவன் சென்றடைய நினைக்கும் மனதுக்கு வழி மறந்த வாழ்வுதான் கிடைக்கிறது. குடும்பம் என்ற வடிவத்தில் எப்பக்கமும் ஏற்ற இறக்கமே. சக மனதுக்குச் சம்மதம் சொல்லும் வாழ்வு சக உடலுக்குச் சன்மானம் தருகிறது. போதும் என்பது மேல் வயிற்றுக்கும் இல்லை. ஆதி வயிற்றுக்கும் இல்லை. அது பூதம் போல.. தினம் தினம் எழுந்து வந்துகொண்டே இருக்கும். அவன் வாழ்வை அசைபோடும் தருணங்களில் மனமெங்கும் போதிகளாய் வளர்ந்து நிற்கிறது நிஜங்களின் நிழல்கள். நிழல்களின் வழியே நின்று சரிந்து உறைந்து போகும் உடல் பெரும் சுமை. கையாளத் தெரியாவிட்டால் வரம் கிடைத்தும் பிரயோஜனம் இல்லை. உடலே வரமென்று உணர முடியாதபோது உள்ளத்தின் குளறுபடி ஆரம்பம் ஆகிறது.

உள்ளும் புறமுமாக அவன் வேறொருவனாகவே உணர்கிறான். இதயத்துள் நிகழ்ந்துகொண்டிருக்கும்





இம்சைக்கு எதுதான் தீர்வென்று புரிய முடிவதில்லை. ஒரு கட்டத்தில் இது நமக்கான இடம் இல்லை என்று உணர்கிறான். சொல்லிக்கொள்ளாமல் மீண்டும் பழைய இடம் நோக்கிப் புறப்படுகிறான்.

அதைக் கண்டுகொண்ட காதல் மனைவி ஓடோடி வருகிறாள். அவளின் முகத்தைப் பார்க்க முடியாமல் தலை குனிந்து நிற்கிறான்.

தத்துவக் கம்பியில் பின்னோக்கி நடை போடும் ஞானத்தின் சூடு தாங்கொணாதது. மீண்டும் அதே நதியில் நிர்வாணமாய் மூழ்கி எழுந்து மீண்டும் புத்த பிட்சு உடையில் நிற்கிறான். குற்றவாளிக் கூண்டில் நிற்பதை விட கடினம்... உற்றவளைப் பிரிந்து அந்த வெட்டவெளியில் நிற்பது. அவளோ கேள்வி மேல் கேள்வி கேட்கிறாள். அவனிடம் பதில் இல்லை. மாறாக பாவம் சேர்ந்திருக்கிறது.

அவள் பேச ஆரம்பிக்கிறாள்...

"புத்தனை மட்டுமே பேசும் உங்களுக்கு யசோதரையின் வலியும் வாழ்வும் எப்படி புரியும். சரி போ..." என்று சொல்லிவிட்டு அழுதபடியே திரும்பிப் பார்க்காமல் செல்கிறாள். ஒரு மாயத்தில் மறைந்து போவது போல அவளின் பிம்பம் காற்றில் கரைந்துபோகிறது. அவனோ அதுவரை தேக்கி வைத்த அத்தனை அழுகையையும் அந்த மணல் வெளியில் ஒரு வெயிலாய்க் கொட்டித் தீர்த்துக் கத்திக் கதறிக் கீழே சரிகிறான். எந்த விதி யாருக்குச் சொந்தம், எந்த வழி யாருக்குப் பயணம், எந்த உறவு எப்போது முடியும்... யோசனையற்ற அழுகை அப்போதைக்குத் தேவை. அவன் புரண்டு கதறுகிறான். அதுவும் ஒரு தியானம் போலத் திரை முழுக்க நிறைகிறது.

ஒரு துளி கடலாவது எப்படி என்று ஒரு கேள்வி... திரையில் வார்த்தைகளாக வந்து பின் பதிலும் சொல்லிப் போகிறது.

"அந்தத் துளியைக் கடலுக்குள் வீசிவிடுங்கள்.."

**மொழி : Tibetan - Ladakhi**

**இயக்கம் : Pan Nalin**

**ஆண்டு : 2001**

# கவிதைகள்

## கார்த்திக் திலகன்




எனக்குள் நெளிந்துகொண்டிருக்கும்
ஒரு கத்தி
எந்த உறவை வேண்டுமானாலும்
அறுத்துவிடக் கூடிய
ஆற்றல்மிக்கது
இப்போதைக்கு அதை
வெளியில் எடுப்பதில்லை
என்கிற வைராக்கியம்தான்
என்னை வழிநடத்துகிறது
கத்தியின் கைப்பிடியை
அழுந்தப் பற்றிக்கொண்டு
என்னைச் சூழ்ந்திருக்கும் கூட்டத்தை
பார்த்துப் புன்னகைக்கிறேன்
எப்போதும்
~

மரம் தன்னைத்தானே
கடவுள் என்று நினைக்கிறது
என்கிறார் தேவதேவன்
மரம் எவ்வளவு குறைந்தாலும்
ஒன்றும் குறையாதது போல்
நிற்கிறது என்கிறார் தேவதச்சன்
இரண்டுக்கும் ஏதோ
பொருத்தம் இருப்பதுபோல்
தோன்றுகிறது இல்லையா
~

காலையில் மலர் விரிவது போல்
இந்த வெயில் விரிகிறது
மலர் கூம்புவது போல்
மாலையில் கூம்புகிறது
மாளாத இந்த வெயில் மலரை
ஒரு புத்த பிக்கு போல
கையிலேந்தி
மாலையில்
கடலில் இறங்குகிறது பகல்
~


யாரும்
இல்லாத இடத்தில்
எல்லோரும் இருக்கிறார்கள்
என்ற ஒரு கவிதையைப் படித்தேன்
யாரும் இல்லாத
இடத்துக்குப் போய்
அங்கிருந்த எல்லோரிடமும்
அந்தக் கவிதையைப் படித்துக் காட்டினேன்
எல்லோருக்கும்
அது பிடித்திருந்தது
~

■

சிறுகதை

ஜபினத்

# ஹெச் டு ஓ




க்ரஷ் அலுவலகம் முடிந்து வீட்டுக்குச் செல்ல ஆயத்தமாகிக்கொண்டிருந்தான். இன்னும் அவனுக்கான வாகன சமிக்ஞை அழைப்பு வரவில்லை. அலுவலகத்தில் இருக்கும் தனக்கான ரகசிய அறையைக் கடவு எண் மூலம் அடைத்துவிட்டுத் தானியங்கித் தரை மூலமாக வாகனங்கள் இருக்கும் பகுதிக்குச் சென்றுகொண்டிருந்தான். அவனுடைய நினைவு முழுக்கத் தான் உருவாக்கிக்கொண்டிருக்கும் புதிய ப்ராஜெக்டையே சுற்றிச் சுற்றி வந்தது. கிட்டத்தட்ட ஏழு மாதங்களாக அதற்காக உழைத்துக்கொண்டிருக்கிறான்.

அவனுடைய வேலை நேரங்களுக்கான நினைவலை வசதிகள் முழுவதையும் அந்த ப்ராஜெக்டிற்காகவே செலவழித்துக்கொண்டிருக்கிறான். அப்படி இருந்தும் அவனால் முழுமையாகக் கவனம் செலுத்த முடியாமல் நினைவலைக் குப்பியிலிருந்து டானியாவின் நினைவுகளைத் தற்காலிகமாக அழித்திருந்தான்.

க்ரஷின் வாகன அழைப்பு கைக்கடிகாரத்தில் ஒலித்தது. தன்னுடைய மின்னட்டையைச் செலுத்தி அலுவலகப் பார்க்கிங் ஏரியாவிற்குத் தானியங்கிப் பாதை வழியாக வந்து சேர்ந்தான். க்ரஷின் கார் அவனுக்கு முன் நின்று கதவுகளைத் தானாக திறந்துகொண்டது. இன்றைக்கு மனம் இருக்கும் நிலையில் அவனாக வண்டி ஓட்ட ஆசைப்பட்டான். ஆட்டோ ட்ரைவ் ஸ்விட்ச்சை ஆஃப் செய்துவிட்டே செல்ஃப் ட்ரைவை ஆன் செய்தான். வழிகாட்டுதல்களுக்கு சேஃப்ட்டிகளுக்கு ஆட்டோ பட்டனை அழுக்கிவிட்டு ட்ரைவிங்கில் மனம் லயிக்கத் துவங்கினான். அலுவலகத்தின் நூற்றி நாப்பத்தி ஏழாவது மாடியில் இருந்து வாகன லிஃப்ட்டின் வழியாக இருபதாவது மாடிச்சாலைக்கு இறங்கினான். பொதுச் சாலைக்கான கதவு திறந்தது. தனக்கான சிக்னல்கள் அத்தனை ட்ராபிக்காக இல்லாமல் எளிதாக இருந்ததைக் காரின் முன் கண்ணாடியில் கணினி நிழல் பிம்பங்களின் வழியே பார்த்துக்கொண்டே வண்டியை ஓட்டத் துவங்கினான்.

மிட்டாவின் குரல் கேட்டது. “எத்தனை முறை சொன்னாலும் செல்ஃப் ட்ரைவிங் செய்யாமல் உங்களால் இருக்க முடியாதா?” என்று சிணுங்கினாள் க்ரஷ். “ஐ டேக் மை செல்ஃப் டியர்” என்று முணுமுணுத்துக்கொண்டான்.

மிட்டாவால் அதற்கு மேல் எதுவும் சொல்ல முடியவில்லை. அவளுடைய நினைவலையின் டாக்கிங் பகுதி வெகு

குறைவாக இருந்தது. க்ரஷுக்கு அது மிக வசதியாக இருந்தது. இல்லையென்றால் கேள்வி கேட்டுக் குடைந்து எடுத்து விடுவாள். அவளுடைய அமைதியை க்ரஷ் தன்னுடைய ப்ராஜெக்டை நிம்மதியாகச் செய்வதற்கு உகந்ததாக இருப்பதாகக் கருதினான்.

அதனாலேயே அவளுடைய கூடுதல் டாக்கிங் வசதிக்காக எந்த மெயிலையும் அனுப்பவில்லை. அவளும் வேலைப் பளுவில் அதைப் பற்றிப் பெரிதாகக் கேட்டுக்கொள்ளவில்லை.

க்ரஷ்ஷும் மிட்டாவும் தம்பதிகள். க்ரஷ் ஒரு ப்ரைவேட் கம்பெனியின் ஊழியன். புதுப்புது கண்டுபிடிப்புகளைத் தன் கம்பெனிக்காகச் செய்து கொடுப்பவன். மிட்டா வாட்டர் ரிசர்ச் செண்டரில் பணிபுரிபவள். தமிழகத்தில் இருக்கும் மொத்தத் தண்ணீரையும் மில்லி லிட்டர் கணக்குப் பார்த்து அரசுக்குச் சொல்லவேண்டிய ஒப்பந்த நிறுவனம் அது. அடிக்கடி ஊர் ஊராகச் செல்வது என எப்போதுமே மிட்டா பிசியாக இருப்பாள்.

க்ரஷுக்குக் கம்பெனி, தன் கண்டுபிடிப்புகள், மகளுடன் கணினி உரையாடல் எனத் தனி உலகம். க்ரஷின் உழைப்பால் படிப்படியாக முன்னேறி க்ரீன் கார்ட், கார், ப்ளாட் என சகல வசதி வாய்ப்புகளோடு சென்னையின் ப்ளஸ் பகுதியில் ஓரளவு நிம்மதியோடு வாழ்ந்து வருகின்றனர்.

மிட்டா மெமரித் திரையில் க்ரஷைத் தேர்ந்தெடுத்தபோது கல்யாணக் கோரிக்கையே ப்ளஸ் குடியிருப்பில் ஒரு ப்ளாட் என்பதாகத்தான் இருந்தது.

அதென்ன ப்ளஸ் குடியிருப்பு? சென்னையில் மக்கள் தொகை 2050 வாக்கில் எக்கச்சக்கமாகிப் போகவே மக்கள் தங்களுடைய தங்குமிடத்திற்காக எல்லையை நீட்டித்துக்கொண்டே சென்றனர். ஆனாலும் பல பெரிய கம்பெனி நிறுவனங்களுக்கும், பணக்காரர்களுக்கும் அவர்களுடைய வாழ்வியல் மற்றும் தொழில்ரீதியாகச் சென்னையின் மத்தியில் இடம் தேவைப்பட்டது.

அப்போதுதான் அவர்களுடைய தேவையைப் புரிந்துகொண்ட ஒரு பன்னாட்டு நிறுவனம் அரசின் உதவியோடு கடலுக்குள் கட்டிடங்களை எழுப்பத் துவங்கியது. இதற்காக 2050 ஆண்டில் மாபெரும் எதிர்ப்பும் போராட்டங்களும் நடந்ததாகப் பல வரலாறுகள் உள்ளன. ஆனாலும் ஆதிக்கர்களின் கைகளே தூக்கி இருந்ததால் போராட்ட மக்கள் ஒடுக்கப்பட்டனர்.

பல நூற்றாண்டுகளாகச் சென்னை மக்களின் பொழுதுபோக்கு இடமாக இருந்த மெரினா அழிக்கப்பட்டது. அப்போது முதல் மெரினா துவங்கி பாண்டிச்சேரி வரையிலான கடலுக்குள் பத்து கிலோ மீட்டருக்கு மேல் பணக்கார முதலைகள் இடம் வாங்கி உயரமான அப்பார்ட்மெண்ட்களைக் கட்டிப் பெரும் பணக்கார மனிதர்களுக்கு விற்கத் துவங்கினர். 2100க்குள் அத்தனை குடியிருப்புகளும் விற்றுத் தீர்ந்தன.

அப்படியான கடலுக்குள் அமைந்த சாலைகள், வீடுகள், பள்ளிக்கூடங்கள் ப்ளஸ் ஏரியா எனவும் அதற்கு எதிர்புறத்தில் இருக்கும் பழைய சென்னை மைனஸ் ஏரியா எனவும் பில்டர்களால் வியாபார யுக்திக்காகக் கையாளப்பட்டு அதுவே நிலையாகவும் ஆகிப்போனது.

க்ரஷ் காரைத் தனது அப்பார்ட்மெண்டின் சாலைக்குள் நுழைத்து லிஃப்ட்டின் வசதியோடு எழுபத்தி ஏழாவது மாடிக்குக் கொண்டு சென்றான். காரை பார்க் செய்துவிட்டுக் கணினி அட்டை வழியாக தன் அறைக்குள் நுழைந்தான். மிட்டா இன்றும் இரவு வரமாட்டாள் என்று செய்தி

அனுப்பியிருந்தாள்.

க்ரஷிற்கு டான்யாவிடம் பேச வேண்டும் போல் தோன்றியது. இரவு உணவுக்கான கோதுமை ப்ரட்டுகளை எலக்ட்ரிக் கம்பிகளில் சூடு செய்துகொண்டே கைக்கடிகாரத்தில் டான்யாவை அழைக்க, சில நிமிடங்களுக்குப் பிறகு டான்யா கிச்சன் சுவற்றில் தெரிந்தாள்.

உரையாடல்கள் ஆங்கிலத்தில்.

“எப்படி இருக்க செல்லம்?”

“நல்லாருக்கேன்... அம்மா எங்கே?”

“வேலைல இருக்கா, உனக்கு எதாவது தேவைப்படுதா?”

“கொஞ்சம் எக்ஸ்ட்ரா மெமரி அப்றம் வாட்டர்?”

“மெமரி நான் ரிக்வெஸ்ட் மெயில் அனுப்பறேன். பட் வாட்டர் நோ மா”

“சரி டாடி, பை...”

டான்யா மறைந்துவிட்டாள்.

க்ரஷ் தன்னுடைய இரவு உணவை முடித்துவிட்டு ஹெரிடேஜ் லாக்கரிலிருந்து இரவுக்கான வாட்டர் பப்புளை எடுத்துக்கொண்டு வராண்டாவில் உள்ள இருக்கையில் அமர்ந்து கடலை ரசித்தவாறே பப்புளை உற்று நோக்கினான். அவன் கடந்து வந்த வரலாறு நினைவலையில் வந்து சென்றது. தன்னுடைய சீனியர் ஒருவரால்தான் இந்த வாட்டர் பப்புள் கண்டுபிடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

நூற்றாண்டுகளுக்கு முன் மக்கள் குடிக்க தண்ணீரை எப்படியெல்லாம் பயன்படுத்தினார்கள். மழைகளை வீணாக்கி, ஆறு குளங்களை அப்போது வாழ்ந்த கார்ப்பரேட் நிறுவனங்கள் பிச்சி எடுத்துக்கொண்டு போக என்ன செய்கிறோம் என்று தெரியாமலே தங்களுடைய பெரும் செல்வமான நீர் நிலைகளை எவ்வாறெல்லாம் மக்கள் வீணாக்கி, இப்படி ஒரு நிலைக்கு என்று நினைக்கும்போதே அரசிடமிருந்து மெமரி எச்சரிக்கை செய்து மூளையைத் தாக்கியது. க்ரஷிற்குத் தொண்டை அடைத்துக்கொண்டு வந்தது. இப்படி அதிகம் யோசித்தால் மூளைச் சூடாகும், உடலில் வெப்பம் பரவும், மனித உடலுக்குத் தண்ணீர் தேவைப்படும் என்பதால் மனிதர்களின் யோசிக்கும் கட்டுப்பாட்டை அரசு தன்னுடைமையாக்கி வைத்திருந்தது.

க்ரஷின் ஜீன் ஒரு போராளியின் ஜீனிலிருந்து உருவாகி இருக்க வேண்டும். அவனுடைய கண்டுபிடிப்புகள் எல்லாமே அதைச் சார்ந்ததாகவே அமையும். அவனுடைய மாபெரும் கண்டுபிடிப்பு, அறுபது வயதுக்கு மேலான முதியோர்களைக் கருணைக்கொலைகளிலிருந்து தடுத்து நிறுத்தியதுதான். 2100இல் துவங்கிய கருணைக்கொலைகள் மக்களிடையே உளவியல்ரீதியாக மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

‘என் தாத்தா இருந்த வரை வாட்டர் பப்புள்ஸ்க்குத் தட்டுப்பாடு இருந்தது. என்னுடைய குறைந்த வருமானத்தில் எங்களால் மெமரிகளைக் கூட வாங்க முடியாமல் திண்டாடினோம். வீட்டு வாடகை கொடுக்க முடியாமல் ஊருக்கு வெளியே அகதிகள் போல் தங்க நேர்ந்தது’ என்பதைப் போன்ற ஆயிரக்கணக்கான மெயில்களைக் கருணைக்கொலைகளுக்குச் சாட்சியாக அரசு சமர்ப்பித்தது.

க்ரஷால் அதைத் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. ஒரு ஊசியில் முடிந்துபோகும் உயிரை க்ரஷ் வெறுத்தான். தனக்கு அப்படி ஒரு நிலை வந்துவிடக்கூடாது என யோசித்து ஒரு முடிவு செய்தான். அதுதான் டான்யாவையும் அவனிடமிருந்து பிரித்தது.

ஒவ்வொரு வீட்டிலும் பணி செய்யும் நபர்கள் மட்டுமே இருக்க வேண்டும் என்பதும் பணி புரியும் வயது வரை குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடங்கள், கட்டாயத் தங்கும் வசதிகளைச் செய்து தர வேண்டும் என்றும், முதியவர்களுக்கான தங்குமிடத்தை அரசு செய்து தர வேண்டும் என்பதுமான ப்ராஜெக்ட்டை உருவாக்கினான்.

குழந்தைகள் எல்லாரும் ஒரே இடத்தில் இருந்ததால் உணவு, தண்ணீர், போக்குவரத்து, இதர செலவுகள் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக அரசு அறிக்கை வெளியிட்டது. அதன் அடிப்படையில் முதியோர்களின் கருணைக் கொலை சட்டம் 2170இல் கைவிடப்பட்டது. முதியோர்கள், அரசு ஊழியர்களாகத் தனி இடத்தில் தங்க வைக்கப்பட்டனர். அவர்களுடைய பணிக்குத் தண்ணீரும், உணவும், மருந்துப் பொருட்களுமாகச் சம்பளம் கொடுத்தது அரசு.

வருடத்தில் ஒருமுறை குழந்தைகளும், முதியவர்களும் தங்கள் வீடுகளுக்குச் சென்று வர பேட்ச் வாரியாக விடுமுறை அளித்தது. ஒரு வார நாட்களுக்குள் அவர்கள் திரும்பச் செல்லவும் அந்த உத்தரவு அறிவித்திருந்தது.

க்ரஷின் அடுத்த ப்ராஜெக்ட் என்பதும் இதைச் சுற்றியே அமைந்தது. தொடுதிரையில் அவனுடைய முதுமைக்குள் இதைச் செய்துவிட துடித்தான்.

ஒவ்வொரு அப்பாக்களுக்கும் இருக்கும் அடிப்படை ஆசையான மகளைத் தூக்கித் தொட்டு முத்தமிட்டுக் கொஞ்சும் காலங்களைச் சமுதாயத்தின் நன்மைக்காகவும், முதியோர்களின் மீதான மரியாதைக்காகவும் இழக்க நேரிட்டது. அதனால் பல்வேறு எதிர்ப்புகளையும், தாக்குதல்களையும் க்ரஷ் சந்திக்க நேரிட்டது.

தகப்பன்களின் கோபம் என்பதைப் புரிந்துகொண்டான். அவனுடைய பாதுகாப்பிற்காக அரசு அறிவுரையின் பெயரில் க்ரஷின் அலுவலகம் அவனுக்குப் பல சேஃப்ட்டிகளைச் செய்து கொடுத்திருந்தது.

இதையெல்லாம் தாண்டி அவனுடைய ப்ராஜெக்ட் என்பது மெமரித் திரையில் தெரியும் உருவத்தைத் தொடுதலுக்குக் கொண்டு வரும் மாபெரும் முயற்சி...

ஆம், அதற்கான முயற்சியில் ஒவ்வொரு முறையும் தோற்றுக்கொண்டே இருக்கின்றான். ஒரு தகப்பனின் ஜீனும் மகளுடைய ஜீனும் அதனுடைய கோட்டலையில் ஒன்றிணையும்போது ஒருவித ரேசரின் புணர்ச்சியால் மெமரித்திரை ஒருவிதப் பொய் உணர்ச்சியைத் தரும். அது பொய் என்ற போதிலும் தாய்மை உணர்ச்சி, காட்சியில் தெரியும் உறவு முறை, தன்னுடைய ஜீன்களில் பொருத்தம் என்ற பெருமிதம் எனப் பலகோணச் சந்திப்பின் உணர்வுப் பிரவாகத்தில் அத் தொடுதல் என்பதை இயல்பானதாக மனம் நம்பக்கூடும்.

தன்னுடைய முதுமைக்குள் அதைச் செய்துவிட வேண்டும் என்ற ஆவலும் அதே நேரத்தில் தன்னால் பிரிந்த தகப்பன், பிள்ளைகளுக்குத் தான் செய்ய வேண்டிய நன்றிக்கடனாகவும் அதனைக் கருதினான்.

மிகப்பெரிய கருங்கடலின் முன் எத்தனையோ மாற்றங்களை நிறைவேற்றினாலும், அது மனிதன் எனும் மிருகத்தின் ஆட்டத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தாலும், எப்போதும் இயல்பாகவே அலையடித்துக்கொண்டிருந்தது.


க்ரஷ் தன் கையிலுள்ள வாட்டர் பப்புளைத் தொண்டைக்குள் வைத்து அழுத்த, அது உடைந்து தொண்டையை நனைத்துக்கொண்டு சென்றது.

■

செல்வி கணேசன்

# ஒன்றிப்போகச் செய்யும் எழுத்து






**நூல் : மாயாதீதம்**

**எழுத்தாளர் : என்.ஸ்ரீராம்**

தலைப்பிற்கேற்ப மாயையின் பலத்தைப் பற்றியே கதை முதல் வரியில் இருந்து கடைசி வரி வரைக்கும் நம்மைக் கொண்டு செல்கிறது. நாட்டார் தெய்வங்களின் வழிவந்த கதைகளை மையமாக எடுத்துகொண்டு எழுதப்பட்ட நாவல்.

கதைக்கான களம் சிறப்பானதாக இருந்தது. கண்தெரியாத சிறுவனை மருத்துவர்கள் கைவிட்ட நிலையில் கோட்டை மாரியம்மன் காப்பாற்றுவாள் என்ற ஆழமான நம்பிக்கையுடன் வேணு தன் சித்தப்பாவின் அரவணைப்பில் இருந்து கண்பார்வை பெறுகிறான்.

இடையில் வாதநாரயாண மரங்களின் வாசனை நம்மைத் தொடர்ந்து வருகிறது. கதையில் வரும் கதாபாத்திரங்கள் தங்களை உயர்த்திப் பிடிக்க எல்லா இடங்களிலும் போட்டி போடுகின்றன. வேணுவின் அழுத்தம் வயதை மீறிய ஒன்றை நமக்கு இடித்துரைக்கிறது.

கதையில் மாயையின் நிழலாக உலாவரும் தேசாந்திரிக்காரன் எல்லா இடங்களிலும் வேணுவின் சிரம் தடவியபடியே... ஒரு சித்தனின் சிரிப்புடன் நம்மை வியக்கவைக்கிறார்.

அழகான காதல். பார்கவி நீர்வண்ண ஓவியமாக மிளிர்கிறாள். நூறுபக்கத்தில் நம்மை கதையுடன் ஒன்றிப்போகச் செய்யும் எழுத்து நடை.

மாயையின் ஆதிதம் என்று இதை எளிதில் கடந்துவிட முடியாது. எங்கோ ஒருவர் தன்னுடைய நம்பிக்கையை ஊன்றி விதைத்து நீர் வார்த்து வளர்க்கிறார். மூடநம்பிக்கை என்று நாம் எளிதாகக் கடந்துவிட முடியும் என்றால் முடியும். ஆனால் நாம் பற்றியுள்ள கரத்தை பொருத்தும் நம்முடைய தீவிரத்தைப் பொருத்துமே நமக்கான அதிசயம் நிகழும். நம்மைச் சுற்றியும் எதோ ஒரு தேசாந்திரிக்காரன் இருப்பான் நிச்சயமாக.

எனக்கு மிகவும் பிடித்த புத்தகமாக இருந்தது. ஒரே அமர்வில் வாசித்து முடித்தேன். ■

படைப்பு

## சிறை வாசிகளுக்கு

# புத்தக தானம் செய்வீர்!

“ஒரு எழுத்து மனிதனின் வாழ்வை மாற்றி அமைக்கும்” என்ற உயரிய எண்ணத்தோடு புத்தகங்களை திரட்டிக் கொண்டிருக்கும் சிறைத்துறையின் ஒப்புதலோடு இலக்கிய படைப்பு குழுமம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறைச்சாலை நூலகங்களுக்கும் நூல்களை சேகரித்துக்கொண்டிருக்கிறது.


புத்தகங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

**இலக்கிய படைப்பு குழுமம்**

#3, அஜந்தா டவர்ஸ், தரைத்தளம், கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம், சென்னை – 600 024

Ph: +91 7338847788

padaippu admin@padaippu.com www.padaippu.com